லஞ்ச ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-6 இதழ்-1 ஜூன்-2017 மாத இதழ் விலை ₹10/-



# நெருங்கும் தேர்தல் இணையும் கூட்டணி




# வைர விழா நாயகனுக்கு வணக்கப் பூக்கள்...



திருக்குறளுக்கு உரை எழுதுவதை
இமய மலைக்கு பொன்னாடை
போர்த்துகிற முயற்சி என்பார்
வைரவிழா புரட்சி நாயகன் கலைஞர்!

இந்த உலகத்தமிழ் நாயகனுக்கு
வைர விழா என்பது நமது
செந்தமிழ் இமய மலைக்கு நாம்
போர்த்துகிற பொன்னாடை!

வீரத் தமிழர்களின் வெற்றி பெருமிதம்
நம் கலைஞர் என்ற செந்தமிழ் பதம்
கழகம் கண்ட சமத்துவ வேதம்
காணப் போகிறார் கண்டிப்பாய் சதம்!

அருணை கழக அன்பு நாயகன்
குளங்களை செப்பனிடும் குணநாயகன்
அண்ணன் எ.வ.வேலு தலைமையில்
வைர விழா நாயகனை
வணங்கி மகிழ்கிறேன்!




என்றும் கழகப் பணியில்
கலை நன்மணி
கவிஞர் ஆ.தே.முருகையன்
மாவட்ட துணை அமைப்பாளர் ,
கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை,
தலைமைக் கழக பேச்சாளர்,
திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க.
செல் : 95973 66607, 9487720596
Email : tvmsweet@gmail.com

சிறப்புத் தலையங்கம்

# அறம் எனும் அரியாசனம்



வானம் எனும் பூதம்
அமைதியாய் பார்த்துகொண்டிருக்க
நிலம் எனும் பூதம் காய்ந்து கிடக்க
நீர் எனும் பூதம் வறண்டு கிடக்க
அக்னி எனும் பூதம் அனலாய் சுட்டெரிக்க
காற்று எனும் பூதம் மாசு கலந்திட
ஆளும் அரசு படும்பாட்டை
கண்கூடாக காணும்பொழுது
இயற்கையின் ஐந்து கூறுகளை
மிஞ்சிவிட்டார்கள் என்றுதான் தெரிகிறது.
அரசியல் எனும் சம தர்மத்தில்
அரியாமையை சாகடித்து.
அதில் படிந்துக் கிடக்கும்
லஞ்ச லாவண்ய கறைகளை
நேர்மை என்ற ஆசிட்டால் அலசிவிட்டு
அறம் அரியணையில் அமர வேண்டும்
அரசியல் சண்டை போடும்
சாதகமாக இல்லாமல்
சமத்துவம் பாடும் வேதமாக மாற்ற வேண்டும்
தேர்தலில் நிற்பவர்களையெல்லாம்
தேர்ந்தெடுத்ததின் விளைவுதான்
இப்படி நாடு நாசமாகிக் கொண்டிருக்கிறது
அறம் தவறினால் சிரம் தவறிவிடும்
என்பதை ஜனநாயகவாதிகள்
உணர்த்த வேண்டும்.
அரசியல் சாக்கடை என்று
காலங்காலமாக
கூவிக்கொண்டிருக்காமல் அதில்
உள்ளே சென்று சுத்தம் செய்ய வேண்டும்
அப்பொழுதுதான்
நாடும், மக்களும் நலம் பெற முடியும்.

– ஆசிரியர்




# சென்னையில் ஸ்மார்ட் கார்டு வழங்குவதில் புதிய சிக்கல்

தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் ரேசன் கார்டுகளுக்கு பதிலாக புதிய 'ஸ்மார்ட்' கார்டு வழங்கப்படுகிறது. கடந்த 1ம் தேதி ஸ்மார்ட் கார்டு வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தொடங்கி வைத்தார். சென்னை மாவட்டம் தவிர பிற மாவட்டங்களில் ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சென்னையில் ஸ்மார்ட் கார்டு வழங்குவது மேலும் தாமதமாகும் என்று தெரிகிறது. குடும்ப அட்டை விவரங்களுடன் ஆதார் எண் இணைக்கப்பட்டவர்களுக்கு எஸ்.எம்.எஸ் மூலம் தகவல் வரும் என்றும் அந்த தகவலை ரேசன் கடைகளுக்கு சென்று காண்பித்தால் 'ஸ்மார்ட்' கார்டு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதுபோல குடும்ப அட்டைதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களது செல்போனுக்கு எஸ்.எம்.எஸ் வரும் என்று காத்திருந்த நிலையில் திடீரென அதிர்ச்சி தரும் தகவல் ரேசன் கடை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலானவர்களுக்கு ஸ்மார்ட் கார்டு இன்னும் தயாராகவே இல்லை. ஆதார் அட்டையில் உள்ள புகைப்படத்தை ஸ்மார்ட் கார்டில் இணைப்பதற்கு புகைப் படம் தெளிவாக இல்லாததால் முழுமையாக பிரிண்ட் செய்யப்படவில்லை.

புகைப்படம் தெளிவாக இல்லாதவர் களின் பட்டியல் ஒவ்வொரு ரேசன் கடை களுக்கும் அனுப்பப்பட்டு குடும்ப அட்டை தாரர்களுக்கு தற்போது தெரிவிக்கப்பட்டு வருகிறது. அந்த பட்டியலில் உள்ள குடும்ப அட்டை தாரர்கள் உடனடியாக TNEPDS என்ற ஸ்மார்ட் போன் செயலியில் அல்லது www.tnpds.gov.in என்ற இணைய தளத்தில் உள்ள வசதியினை கொண்டு புகைப்படத் தினை பதிவேற்றம் செய்ய வேண்டும். விவரங்கள் ஏதாவது விடுப்பட்டு இருந்தால் இந்த இணையதள வசதியினைக் கொண்டு பதிவு செய்யப்பட்ட கைபேசி எண் மூலமாக சரி செய்து கொள்ளலாம்.

இந்த விவரங்கள் சரி செய்த பிறகு தான் ஸ்மார்ட் கார்டுகள் அச்சிட்டு வழங்க முடியும் என்று உணவு வழங்கல் துறை அறிவித்துள்ளது.

எனவே புதிய ஸ்மார்ட் கார்டு வழங்கு வதற்கு மேலும் சில நாட்கள் ஆகும் என்று கூறப்படுகிறது. எனவே குடும்ப அட்டை தாரர்களின் செல்போன் எண்கள் மிகவும் அவசியம். அதன் மூலமே திருத்தங்கள், மாற்றங்கள் செய்ய முடியும். ஏற்கனவே செல்போன் எண் இணைக்காதவர்கள். அல்லது பதிவு செய்யப்பட்ட செல்போன் எண்ணை தற்போது மாற்றியவர்கள் அல்லது ஏற்கனவே செல்பேசி எண்ணை தவறாக பதிவு செய்தவர்கள், நியாயவிலை கடை, அல்லது சேவைமைய எண்கள் 1967 அல்லது 18004255901 அல்லது உதவி ஆணையர் அலுவலகங்களை அணுகி சரியான செல்பேசி எண் குடும்ப அட்டையுடன் இணைக்கப் படுவதை உறுதி செய்து கொள்ளும்படி உணவுத் துறை அதிகாரிகள் கேட்டு கொண்டுள்ளனர்.

– கனகதுர்கா



குழம்பிப்போன

# ரஜினி

## தெளிவான ரசிகர்கள்!

வெள்ளைத் தாமரைப் பூவின் இதழ்களிலிருந்து மேல் நோக்கி விரியும் அபான முத்திரை. இந்தப் பின்புலத்தில் நின்றுகொண்டுதான் நடிகர் ரஜினிகாந்த் மீண்டும் ஒரு முறை தனது கண்ணாமூச்சி ஆட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்.


'பாபா' முத்திரை எனப் பரவலாக நம்பப் படும் அபான முத்திரை, உடலைத் தூய்மைப் படுத்தும் ஆற்றல் கொண்டது எனச் சொல்லப் படுகிறது. ஆன்மிகரீதியில் தாமரை என்பதன் பொருள் வேறு. அரசியலில் அதன் பொருள் வேறு. அபான முத்திரையின் பயனாகச் சொல் லப்படும்தூய்மைப்படுத்துதல்என்பதற்கு உடல் சார்ந்து கொள்ளக்கூடிய பொருள் வேறு, அரசியல் சார்ந்த பொருள் வேறு. ரஜினிகாந்த் தன் ரசிகர்களைச் சந்தித்தபோது, பின்புலத்தில் இந்த இரு சின்னங்களும் இருந்ததை எப்படி வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்.

ரஜினியின் பேச்சும் அப்படித்தான். திரை யிலும், அதற்கு வெளியிலும் அவர் பலமுறை இத்தகைய வசனங்களைப் பேசியிருக்கிறார். 'என் வழி தனி வழி', 'வர வேண்டிய நேரத்துல வந்துடுவேன்', 'கடமையைச் செய்.. பலனை எதிர்பார்', 'நான் அரசியலுக்கு வந்தால்தூய்மை யான அரசியலையே முன்னெடுப்பேன்'

இதுபோன்ற வசனங்களைப் பரிசீலித்தால், ஒரு விஷயம் தெளிவாகப் புரியும். அரசியல் விஷயத்தில் ஆழமான எந்தக் கருத்தும் ரஜினிக்கு இல்லை. அப்படியே இருந்தாலும் அதை அவர் சொன்னதில்லை.

வணிக ரீதியில் உச்ச நட்சத்திரமான ரஜினிக்கு அபரிமிதமான அளவில் ரசிகர் பட்டாளம் இருக்கிறது. 1994-95 காலகட்டத் தில் மொத்தத் தமிழகமும் ஜெயலலிதாவின் அதிரடி கண்டு ஒடுங்கி நின்றபோது, ஜெயலலி தாவைப் பொது அரங்கில் நேரடியாக விமர் சித்தவர் ரஜினி. அப்போது சந்தையில் அவரது நிலை உச்சத்தில் இருந்தது. 'பாட்ஷா'வுக்குப் பின் திரைக்கு வெளியில் வெளிப்படையாக அரசியல் பேசிய ரஜினி, 'படையப்பா'வில் படத்துக்குள்ளும் அதைத் தொடர்ந்தார். 'பாபா'வில் அது உச்சம் பெற்றது. ஆனால், அந்தப் படம் எதிர்பார்த்த அளவு ஓட வில்லை. அதிலிருந்தே அவருடைய அரசியல் குரல் தேயத் தொடங்கியது. பல சமயங்களில் அரசுக்கு ஆதரவாகவும் அவர் குரல் வெளிப் பட்டது.

கால மாறாட்டத்தில் திரையரங்கில் ரஜினி மாயம் மங்கத் தொடங்கியது. அவருடைய படங்களின் தொடக்கக் காட்சிகள் ஏற்படுத் தும் பரபரப்பு குறையவில்லை எனினும் பாட்ஷா, படையப்பா போன்ற படங்களுக்கு இணையான வீச்சும் தாக்கமும் இல்லை என்பது கண்கூடு. சிவாஜி, எந்திரன், லிங்கா, கபாலி ஆகிய படங்களுக்கான முதல் நாளின் ரசிக ஆரவாரம் படிப்படியாகக் குறைந்துவருகிறது. தமிழ்த் திரையுலகமே பெரும் தத்தளிப்பில் இருக்கும் நிலையில், எல்லா நட்சத்திரங்களும்



எதிர்கொண்டிருக்கும் நெருக்கடி ரஜினிக்கும் இருக்கிறது. ரஜினி படத்தால் நஷ்டம் என்னும் புலம்பல்கள் ‘சந்திரமுகி’க்குப் பிந்தைய ரஜினியின் எல்லாப் படங்கள் தொடர்பாகவும் எதிரொலித்துவருகின்றன. ரஜினி, எல்லாத் தரப்பினருக்கும் லாபம் தரும் படத்தைக் கொடுத்து 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. திரைத் துறையில் தன்னுடைய இடம் மெல்ல மங்கிவருவதை உணர்ந்துதான் தன் அரசியல் பிரவேசம் பற்றி அவர் பூடகமாகப் பேசுகிறாரா என்னும் ஐயத்தை அவர் பேச்சு ஏற்படுத்துகிறது.

தமிழக அரசியலில் ஸ்திர மின்மை நிலவும் இந்தச் சமயத்தில் ரசிகர்களைச் சந்தித்துள்ள ரஜினி, அரசியலைப் பற்றிப் பேசியிருப் பதும் ‘பணத்தாசை கொண்ட’ தன் ரசிகர்களைக் கண்டித்திருப்பதும் சாதாரணமாகக் கடந்து செல்ல முடியாதவை. ஜெயலலிதா, கருணா நிதி ஆகியோர் அரசியல் களத்தில் இல்லை, ஆளுங்கட்சி பிளவுபட்டுக் கலகலத்துப் போயிருக்கிறது. திமுக வைத் தவிர வேறு எந்த எதிர்க் கட்சியும் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு வலுவோடு இல்லை. புதிதாக ஒருவர் அரசி யலுக்குள் நுழைய வேண்டுமென்றால், அதற்கு இதைவிடவும் சிறந்த நேரம் இருக்க முடியாது. இந்தச் சூழலையும் திரைத் துறை யில் தனக்கான தனி இடம் மங்கி வருவதையும் கணக்கில் கொண்டே ரஜினி காய் நகர்த்து கிறாரா?

இருக்கலாம். ஆனால், ரஜினியின் அரசியல் பேச்சு வழக்கம்போலவே குழப்பமாக இருப்ப தால் அவருக்கு உண்மையிலேயே அந்த எண்ணம் இருக்கிறதா அல்லது வழக்கமான பூச்சாண்டிதானா என்னும் ஐயமும் எழுகிறது.

அரசியலுக்கு வந்தால் நியாயமான அரசி யலையே முன்னெடுப்பேன் என்றும் அரசியலை வைத்துச் சம்பாதிக்க நினைக்கும் ரசிகர்களுக்கு அதில் இடம் இருக்காது என்றும் தெளிவாகச் சொன்ன அவர், கடைசி யில் எல்லாம் ஆண்டவன் கையில் என்று வழக்கம்போலச் சொல்லிவிட்டார். எல்லாம் ஆண்டவன் கையில் என்றால் இதையெல்லாம் ஏன் பேச வேண்டும்?

இதைக் குழப்பங்களின் குவியல் என்றும் சொல்லலாம். பிறரைக் குழப்பும் தந்திரம் என்றும் சொல்லலாம். தன் ரசிகர்களை அவர் என்னவென்று நினைத்துக்கொண்டிருக்கிறார்?

‘வரும் ஆனா வராது’ இது நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் பிரபலமான நகைச் சுவைக் காட்சியொன்றில் ‘என்னத்தே’ கன்னையா பேசும் வசனம். தமிழ்த் திரையுல கின் உச்ச நட்சத்திரமாகவும் திரையில் அதீத சாகச நாயகனாகவும் விளங்கும் ஒருவருடைய



தனிப்பட்ட வாழ்வின் மிக முக்கியமான ஒரு நகர்வு, 'வரும் ஆனா வராது' என்னும் பரிகாசமாகவே ஆகிவிட்டது நகை முரண்தான்.

ரஜினி இதுவரை வெளிப்படுத்தியுள்ள அரசியல் கருத்தில் மாற்று அரசியலுக்கான சிந்தனையோ செயல்திட்டமோ இல்லை. எல்லாரும் பொதுவாகப் பேசுவது போலத் தூய்மை அரசியலைத்தான் அவரும் பேசுகிறார். தூய அரசியல் பற்றிப் பேசுவது எளிது. அதற்கான செயல்திட்டம் என்ன என்பதுதான் முக்கியம். அதற்கு, அரசியலில் ஊழல் செயல்படும் விதம் குறித்த ஆழமான புரிந்துணர்வு தேவை. இந்தப் புரிந்துணர்வோ அதன் அடிப்படையிலான செயல் திட்டமோ ரஜினிக்கு இருக்கும் என்று நம்புவதற்கான எந்த அடையாளத்தையும் அவர் இதுவரை வெளிப் படுத்தியதில்லை. தூய்மை என்பதைத் தாண்டி, அவர் பேசிய அரசியல் கருத்துகள் எல்லாம் தேசம், ஒற்றுமை, பண்பாடு குறித்தவை. இவை மென் இந்துத்துவ வகையைச் சேர்ந்தவை. எனவே, சித்தாந்தத் தளத்திலும் புதிதாகவோ நம்பிக்கை அளிக்கும் விதத்திலோ அவரது அணுகுமுறை இருப்பதற்கான அடையாளம் எதுவும் இல்லை.

இத்தகைய கருத்தியலை முன்வைத்து அரசியல் செய்ய அவருக்கு உரிமை இருக்கிறது. அல்லது பலரும் கருதுவதுபோல பாரதிய ஜனதா கட்சியுடன் இணைந்து செயல்புரிவதற்கான உரிமையும் இருக்கிறது. ஆனால், அதை அவர் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும்.

தன் அசல் பார்வையை மறைப்பதற்கான முக மூடியாகத் தூய அரசியல் என்னும் கோஷத்தைப் பயன் படுத்த அவர் நினைக்கக் கூடாது. திடீரென்று ஒரு பரபரப்பைக் கிளப்பி விட்டு, அதன்பிறகு ஆண்டவனைக் கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டு தப்பித்துக் கொள்ளவும் நினைக்கக் கூடாது.

தமிழக அரசியல் என்பது திரை நட்சத்திரங்கள் தங்கள் ரசிகர் பலத்தை வைத்துப் பகடை ஆடும் களம் அல்ல. அது மக்கள் வாழ்வோடு தொடர்புகொண்டது. இன்று அது மிகத் தீவிரமான நெருக்கடியில் சிக்கி யிருக்கிறது.

இந்நிலையில், திரையுலக நாயகர்கள் இங்கே வந்து கிச்சுகிச்சு மூட்டுவது, ஸ்திரத்தன்மை இல்லாத அரசியல் சூழலில் சிக்கித் தவிக்கும் மக்கள் மீது செலுத் தப்படும் வன்முறை. தெளிவான பேச்சு அல்லது மௌனம் ஆகிய இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கா விட்டால், ரஜினியின் அரசியல் என்பது நிரந்தரமான நகைச்சுவையாக மாறிவிடும்.;

**– வீ. வடிவேல்**


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை

Applied in **NEWS PAPER ASSOCIATION OF INDIA**

லஞ்ச ஊழல் விழிப்புணர்வு

ஆண்டு-6 ஜுன்-2017 இதழ் - 1

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் (பி) லிட்., சார்பாக
வெளியிடுபவர் ஆசிரியர்
**A. மவுரியன்,** B.A.,Dip. Journilisam,

• ஆசிரியர் குழு
**A. காதர் மொய்தீன், ஆ.தே. முருகையன்,**
**V. அருணாச்சலம், காசி. அரங்கநாதன்**

• நிர்வாக ஆசிரியர்
**வீ. வடிவேல்,** B.B.A.,

• உதவி ஆசிரியர்
காக்களூர் **பாபு தங்கவேல்**

• துணை ஆசிரியர்கள்
**ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார், S.கோபி**
**M. தரணி. எஸ். சரவணன், பி. மாரிமுத்து, D. ரவி,**
**வீரஆறுமுகம், A. பாலச்சந்தர், நா. நித்யா**

• முதன்மை செய்தியாளர்கள்
**சமயசெல்வம்,** மதுரை. **ராம்குமார், பிரகாஷ்,** சேலம்.
**சத்தியராஜ்,** நாமக்கல். **பாலகிருஷ்ணன், செந்தில்குமார்,**
**நாகராஜ பெருமாள்** கோவை.
**R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா, P. சாந்தா,** தென்சென்னை
**சசிக்குமார்,** சென்னை. **குமரேசன்,** ஈரோடு
**யு. அக்ரம்கான், சுக்கூர்கான்,** கிருஷ்ணகிரி.
**பா. சுப்பிரமணியன்,** திருநெல்வேலி. **நாகராஜ்,** மூணாறு.
**மாரிமுத்து,** உளுந்தூர்பேட்டை, **சுசீ ஈஸ்வர்,** தென்காசி.
**ராமசுப்பிரமணியன்,** ராஜபாளையம். **சிலம்பரசன்,** தர்மபுரி,

• நிருபர்கள்
**எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, ராஜேஷ்**
**அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்**

• சட்ட ஆலோசகர்கள்
**M. குணசீலன்,** B.Com.,M.L.,
**M. சுதாகர், B.Sc.,B.L.,**
(உயர்நீதிமன்றம், சென்னை.)

• புகைப்பட நிருபர் : **எம். சந்தோஷ்சிவன்**

• இதழ் வடிவமைப்பு : **AKS CREATIVE'S**

அலுவலகம் :
**மக்கள் விசாரணை**
நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி,
ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.
Email : news@makkalvisaranai.com / www. makkalvisaranai.com
Information Contact : feedback@makkalvisaranai.com
**Phone : 044 - 4354 2611, 93821 33334**



Press & Registration of Book Act-in ன்படி
செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார்.
எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள
நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

# நெருங்கும் தேர்தல்! இணையும் கூட்டணி



அகவை 94-ல் அடியெடுத்துவைக்கும் திமுக தலைவர் கருணாநிதிக்கு இது, அவருடைய சட்ட மன்ற அனுபவத்தில் வைர விழா ஆண்டு. கருணாநிதியின் இந்த 60 ஆண்டு கால சட்ட மன்ற வரலாற்றில், உறுப்பினர், அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், முதல்வர் என்று அவர் பல நிலைகளில் பணியாற்றியிருக்கிறார். வாய்ப்பிருந்தபோதும்கூடப் பல அரசியல் தலைவர்களையும்போல எந்தக் காலகட்டத்திலும் அவர் டெல்லி நோக்கிச் செல்லவில்லை. விளைவாக, இந்திய அரசியல் வரலாற்றில் பல அரசியல் கட்சிகளுக்கே இல்லாத வரலாற்றை அவர் படைத்திருக்கிறார்.

உலகச் சாதனையாகக்கூட இது இருக்கக் கூடும், எந்த நாட்டில் இப்படி ஒரு தலைவர் மக்களால் திரும்பத் திரும்பத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்! ஆனால், ஒரு கருணாநிதியின் தனிப்பட்ட சாதனையாக மட்டும் அல்லாமல், தமிழ்ச் சமூகத்தின் அரசியல் பெருமிதங்களில் ஒன்றாகவும் தன் அரசியல் வாழ்வை அவர் வளர்த்தெடுத்திருக்கிறார் என்பதிலேயே அவருடைய பெருமை இருக்கிறது.

எல்லா அரசியல் தலைவர்களையும்போல அவர் மீதும் ஏராளமான குற்றச்சாட்டுகள் உண்டு; விமர்சனங்கள் உண்டு. 60 ஆண்டுகள் தொடர்ந்து சட்ட மன்றத்துக்குச் செல்கிறார்; அரை நூற்றாண்டு நெருங்கும் நிலையில் தொடர்ந்து கட்சியின் தலைவராக நீடிக்கிறார் என்பதைக்கூட ஜனநாயகத்தின் சாதனை என்று கருதத்தக்க அதே அளவுக்கு ஜனநாயகத்துக்கான சோதனை என்றும் கருத முடியும். ஆனால், எல்லாவற்றையும் தாண்டியும், சாதியப் புதைக் குழி மேல் அமைந்திருக்கும் இந்திய அரசியல் மேடையில் மிக அரிதான சாதனை கருணாநிதியினுடையது.

சமூகரீதியாக எண்ணிக்கை அளவிலும் மிகச் சிறுபான்மையான ஒரு சமூகத்திலிருந்து, அதுவும் சாதிய அடுக்குகளில் கீழே இருக்கும் ஒரு சமூகத்திலிருந்து உடைத்துப் பீறிட்டு எழுந்த பெருநட்சத்திரம் அவர். தமிழகத்தில் ஒரு அரை நூற்றாண்டு காலம் மதவாதச் சக்திகள் தலை தூக்காமல் பார்த்துக்கொண்டதில் அவருக்கு காத்திரமான பங்கு இருக்கிறது! சமூகநீதி வளர்த்தெடுக்கப்பட்டதிலும் தன்னுடைய மகத்தான பங்களிப்பைச் செய்திருக்கிறார். கருணாநிதியின் அரசியல் வாழ்வை இவற்றினூடாகவே நாம் பார்க்க வேண்டும்.

ஒரு முதலமைச்சராக கை ரிக் ஷாக்களை ஒழித்து சைக்கிள் ரிக் ஷாக்களை அவர் அறிமுகப் படுத்தினார். கண்ணொளித் திட்டத்தின் கீழ்

இலவச கண் சிகிச்சை முகாம்கள், இலவச கண்ணாடிகள் வழங்கினார். பிச்சைக்காரர்கள் மற்றும் தொழுநோயாளர்களின் மறுவாழ்வுக்கு தனி இல்லங்களை உருவாக்கினார்.

குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ஏழை களுக்கு வீடுகளைக் கட்டித்தரும் திட்டத்தைப் பெருமளவுக்குக் கொண்டுசென்றார். அனைத்துக் கிராமங்களுக்கும் மின் விளக்கு வசதிகளைச் செய்தார். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினார். தமிழ்நாட்டில் கலை, அறிவியல் கல்லூரிகளின் எண்ணிக்கையைப் பெருக்கினார்.

மாணவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகையை வழங்கினார். அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.அரசு ஊழியர் பணிப் பதிவேட்டில் ரகசியப் பதிவுமுறையை ஒழித்தார். ஆதி திரா விடர், பிற்படுத்தப்பட்டோருக்குத் தனித்தனித் துறைகளை உருவாக்கினார். ஆதிதிராவிடர் களுக்கு இலவச வீடுகள் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். சமத்துவபுரம் என்ற அனைத்து சாதி மக்கள் குடியிருப்பை ஏற்படுத்தினார்.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதிகளை அதிகப்படுத்தினார். கல்வி உதவித் தொகையை உயர்த்தினார். ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார். மொழிப் போர் தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங் கினார். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகச் சட்டமியற்றினார். குடும்பச் சொத்தில் மகள் களுக்கும் பங்கு உண்டு என்பதைச் சட்டமாக்கி னார். மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டம், ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம் ஆகியவற்றைக் கொண்டுவந்தார்.

அரசுப் பணியில் பெண்களுக்கு 30% இடஒதுக்கீடு வழங்க வகைசெய்தார். கல்வித் துறையில் சமச்சீர்ப் பாடத்திட்டத்தை அறிமுகப் படுத்தினார். சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் பயனடையும் வகையில் அவர் பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்.

முதலமைச்சராக அவர் ஆற்றிய பணிகளைப் போலவே எதிர்க்கட்சித் தலைவராக ஆற்றிய பணிகளும் முன்னுதாரணமாகக் கொள்ளப்பட வேண்டியவை. ஜனநாயக அரசியலமைப்பு முறையில் எதிர்க்கட்சித் தலைவருக்கான முக்கியப் பொறுப்பை உணர்ந்து செயல்பட்டவர் அவர். அதன் காரணமாகவே அவர் முதல்வர் பதவி வகித்த காலங்களில், எதிர்க் கட்சி யினர் பேசு வதற்கு உரிய வாய்ப்புகளை வழங்கினார். அவர்களது கேள்விகளுக்குப் பதிலளிப்பதை விரும்பினார்.



சட்ட மன்ற விவாதங்களைத் தனது பேச்சாற் றலாலும் இலக்கிய ரசனையாலும் அரசியலில் எதிர்த்தரப்பினரும் விவாதங்களைக் கேட்டு ரசிக்கும்படியானதாக அவர் உருமாற்றினார்.

இந்திய அரசியலமைப்பு வலுவான மைய அரசுக்கு வழிசெய்திருக்கும் நிலையிலும் மாநில உரிமைகளைத் தொடர்ந்து வலியுறுத்தி அவற்றைப் பெற முயற்சித்தவர் கருணாநிதி. குடியரசு தினம், சுதந்திர தினம் என்று இரண்டு நாட்களிலும் மாநில ஆளுநர்களே கொடியேற்ற வேண்டும் என்ற நடைமுறையை மாற்றி, முதன் முதலாக மாநில முதல்வர் சுதந்திர தின விழா வில் கொடியேற்றும் வழக்கத்தைத் தொடங்கி வைத்தவர் அவர்.

அண்ணா 'ஸ்டேட் ஆப் மெட்ராஸ்' என்றி ருந்ததமிழ்நிலத்தின்பெயரைத்'தமிழ்நாடு' என்று மாற்றினார் என்றால், அண்ணாவின் வழிவந்த கருணாநிதி, தலைநகரின் 'மெட்ராஸ்' என்ற பெயரை 'சென்னை' என்றாக்கினார். காலனி யாதிக்கத்தின் அடையாள அழிப்பு என்று பேசப் படும் நுண்ணரசியலை அவர் அரசியல் தளத்தி லேயே நடைமுறைப்படுத்தினார். மும்பை, கொல் கத்தா என்று இந்தியாவின் மற்ற மாநகரங்கள் பெயர்மாற்றம் பெறுவதற்கு அதுவே முன்னோடி யானது. மாநிலச் சுயாட்சிக்கான உறுதியான குரல்களில் ஒன்றாகக் காலம் முழுவதும் அவர் குரல் ஒலித்திருக்கிறது.

கருணாநிதியின் 60 ஆண்டு சட்ட மன்ற வாழ்க்கை இந்தியாவின் உயிர்நாடியான பன் மைத்துவத்தைப் பாதுகாக்க முக்கியப் பங்காற்றி யிருக்கிறது. அவரது சேவையை அவரது கட்சி யினரும், தமிழக மக்களும் மக்களும் மக்கள் விசாரணையும் நினைவுகூர்ந்து கொண்டாடு கிறது.

– ஆசிரியர்


S.R. BUILDERS & PROMOTERS
62, துரைசாமி பிள்ளை தெரு, ஈத்தனாரி கோவில் அருகில், வெள்ளலூர், கோவை.
Contact : 98422 44018 / 98422 44017
FOR SALE
INDEPENDENCE HOUSE
@ VELLALUR
2 & 3 BHK
INDEPENDENCE HOUSE

சில செய்திகளை அவ்வளவு எளிதாகத் தாண்டி வர முடிவ தில்லை. ரணமாக அறுக்கும் சில சம்பவங்கள் பற்றிய நினைவு கள் மனதைத் தொந்தரவு செய்து கொண்டே யிருக்கின்றன. ஜார்க்கண்ட் மாநிலம் ஜாம் ஷெட்பூரில் சமீபத்தில் 'குழந்தைக் கடத்தல் காரர்கள்' எனும் சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் அடித்துக் கொல்லப்பட்ட சம்பவம் அப்படியான ஒன்று. கண்களில் மரண பீதியும் மன்றாடலுமாகக் கையெடுத்துக் கும்பிடும் ஷேக் ஹலீம். ரத்தம் வழியும் அந்தப் படம். மனதைப் பிசைந்துகொண்டே இருக்கிறது.

அதே நாளில் ஜார்க்கண்டின் சிங்பம் மாவட்டத்தில் மேலும் மூன்று பேர் குழந்தைக் கடத்தல்காரர்கள் எனும் சந்தேகத்தின் பேரில் கொல்லப்பட்டிருக் கிறார்கள். அந்தப் பகுதியில் குழந்தைக் கடத்தல்காரர்கள் உலவு வதாக வெளியான வாட்ஸப் வதந்திதான் இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என்று சொல்லப் பட்டாலும், அடித்துக் கொல்லப்பட்ட ஹலீம் கால்நடை விற்பனையில் ஈடுபட்டிருப்பவர் என்று இப்போது தெரியவந்திருக்கிறது.

இதன் பின்னணியில் பசுப் பாதுகாவலர்கள் இருப்பதாகப் பேசப்படு கிறது. உண்மையில், குழந்தைக் கடத்தல் தொடர்பான எந்தப் புகாரும் வரவில்லை என்று மறுநாள் நடந்த அவசர ஆலோசனைக் கூட்டத்தில் போலீஸ் உயரதிகாரிகள் அறிவுறுத்தி யிருக்கிறார்கள். ஆனால், கொலைவெறிக் கும்பல்களிடமிருந்து அப்பாவிகளை மீட்க போலீஸாரால் முடிய வில்லை.

இவை ஒற்றைச் சம்பவங்கள் அல்ல. 2015-ல் உத்தர பிரதேசத்தின் தாத்ரி நகரில் வீட்டில் மாட்டுக் கறி வைத்திருந்ததாக அடித் துக் கொல்லப்பட்ட அக்லாக் ஒரு தொடக்கம். குஜராத்தின் உனாவில் பசுவைக் கொன்று தோலுரித்ததாகச் சொல்லி தலித்துகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல், மத்திய பிரதேசம் மந்த்சோர் ரயில் நிலையத்தில் மாட்டிறைச் சியைக் கொண்டு சென்றதாக இரண்டு முஸ்லிம் பெண்கள் மீது பஜ்ரங் தள் அமைப்பினர் நடத்திய தாக்குதல் என்று மிக நீண்ட பட்டியல் இது.

மத்தியில் பாஜக ஆட்சியில் அமர்ந்ததும்

# கூட்டுக் கொலையாளிகள்..? திணறும் காவல்துறை..!



இப்படியானகும்பல்கள்பலம்பெற்றுவிட்டன. ஹரியாணா, மகாராஷ்டிரம் என்று பாஜக ஆளும் மாநிலங்களில் மாட்டிறைச்சி விற்பனை தடைசெய்யப்பட்டிருக்கும் நிலையில், இப்படியான கும்பல்கள் தார்மிகப் பலம் பெற்றிருக்கிறார்கள். வெவ்வேறு வார்த்தைகளில் இதை மறுப்பதற்கு ஆட்கள் இருந்தாலும் உண்மை இதுதான். இல்லையென்றால், இதுபோன்ற சம்பவங்கள் அதிகம் நடைபெற்றிராத அஸ்ஸாமின் நாகாவ் மாவட்டத்தில் சில வாரங்களுக்கு முன்னர் 'கால்நடைத் திருடர்கள்' எனும் பெயரில் இருவர் அடித்துக் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்.

தங்கள் அடிப்படைக் கொள்கையை நிறைவேற்றுவதில் முனைப்பு காட்டும் இவர்களுக்கு பாஜக சார்பில் மறை முகமாகவும், சில சமயம் நேரடியாகவும் ஆதரவு வழங்கப்படுகிறது. சமீபத்தில் ராஜஸ்தானின் அல்வர் மாவட்டத்தில், பசுக்களை வாகனத்தில் ஏற்றிவந்த பேலு கான் எனும் முதியவர் நெடுஞ்சாலையில் பலர் கண் முன்னால் அடித்தே கொல்லப்பட்டார். அந்தச் சம்பவத்தில் தொடர்புடைய இளைஞர்களை பகத் சிங்குடன் ஒப்பிட்டுப் பேசும் வலதுசாரித் தலைவர்கள் மிகுந்த அச்சத்தை ஊட்டுகிறார்கள். அந்த முதியவரை இழுத்துத் தள்ளி உதைக்கும் காட்சிகளை ஒரு முறை பாருங்கள். மனித உயிர்கள் பசுவை விட மலிவானவையா எனும் கேள்வி முகத்தில் அறையும்.

பாதிக்கப்பட்டவர்களையே குற்றவாளிகளாகச் சித்தரிக்கவும் அதிகாரவர்க்கம் தயங்குவதில்லை. பேலு கானும் அவரது இரண்டு மகன்களும் கால்நடைத் திருடர்கள் என்று ராஜஸ்தான் உள்துறை அமைச்சர் குலாப் சந்த் கடாரியா கூறியிருந்தார். ஆனால், பேலு கானின் மகன்கள் மீது இப்படியான வழக்குகள் பதியப்பட்டு, விசாரணைக்குப் பிறகு அவர்கள் குற்றமற்றவர்கள் என்று விடுவிக்கப் பட்டார்கள் என்று பின்னர் தெரிய வந்தது. அவர்கள் மீது பொய்ப் புகார் கொடுத்ததும் பசுப் பாது காவலர்கள்தான் என்பது வேறு விஷயம். இன்னொரு சம்பவத்தில் உத்தர பிரதேசத்தில் கால்நடைகளை ஏற்றிச் செல்லும் வாகனத்தை நிறுத்தி அதில் ஏறிக்கொள்ளும் 'பசுப் பாதுகாவலர்' ஒருவர், அருகில் அமர்ந்தபடி 'பசுதான் எங்கள் தாய்' என்று சொல்லச் சொல்லி ஓட்டுநரை அறைகிறார் தொடர்ந்து பல்வேறு முழக்கங்களை வலுக் கட்டாயமாகச் சொல்லச் சொல்லி அறை விழுந்து கொண்டேயிருக்கிறது. வசவுச் சொற்களும் தொடர்கின்றன. வாகனம் சென்று கொண்டேயிருக்கிறது.


மாட்டுத் தோலுக்காக குஜராத் தலித்துக்கள் கொடூரமாக தாக்கப்பட்டனர்

இதுபோன்ற சம்பவங்கள் தரும் அதிர்ச்சியைவிட, இந்தக் காணொலிப் பதிவுகளுக்குக் கீழே காணக் கிடைக்கும் பின்னூட்டங்கள் பெரும் அச்சத்தை ஏற்படுத்துபவை. "ஆம், அப்படித்தான் செய்வேன். அடிப்பேன், உதைப்பேன், எரிப்பேன்" என்று ஒருவர் எழுதியிருக்கிறார். இணைய வெளியில் நடக்கும் கும்பல் கொலைகள் என்றே இவற்றைச் சொல்லலாம். இப்படியானவர்கள் சாலையில் இறங்கினால் கும்பல் கொலைகளுக்குக் குறைவே இருக்காது. அஸ்ஸாமில் கும்பல் கொலையில் ஈடுபடும் காட்சியைப் பார்த்தால் ஏதோ எல்லோரும் கூடித் திருவிழா நடத்துவதுபோல் இருக்கிறது.

அமெரிக்காவில் கறுப்பினத்தவர்களை அடித்துக் கொல்வதையே கொள்கையாகக் கொண்ட 'கு க்ளக்ஸ் க்ளான்' எனும் வெள்ளையின வெறியர் கும்பல்கூட அடையாளம் தெரியாதபடி முகமூடி அணிந்திருப்பார்கள். ஆனால், இங்கு அத்தனை பேர் மத்தியிலும்

படுகொலைகளை நிகழ்த்துபவர்களுக்கு கேமராக்கள் பற்றி எந்த அச்சமும் இல்லை. நமக்குக் காணக் கிடைக்கும் காணொலிகளில் பெரும்பான்மையானவை, குற்றவாளிகளாலேயே ஆர்வத்தின் பேரில் எடுக்கப்பட்டவைதான்.

காஷ்மீரில் ராணுவ ஜீப்பின் முன் பகுதியில் இளைஞர் ஒருவரைக் கட்டி, 28 கிலோ மீட்டர் தொலைவு கொண்டுசென்ற சம்பவத்துக்குக் காரணமான ராணுவ மேஜர் லீத்துல் கோகயைப் பாராட்டி விருது வழங்குகிறது ராணுவம். ஒரு இளைஞரை மனிதக் கேடயமாக ராணுவமே பயன்படுத்துவது சரியா என்று கேட்க அது தயாராக இல்லை. காஷ்மீரில் நடக்கும் போரைப் புதுமையான வழிகளில் எதிர்கொள்வோம் என்கிறார் ராணுவத் தளபதி பிபின் ராவத். ராணுவத்துக்கு எப்போதுமே பக்கபலமாக இருப்போம் என்கிறார் அமித் ஷா. மறுபுறம், கும்பல்கள் என்னென்னவோ காரணம் சொல்லிப் படுகொலைகளை நிகழ்த்திக்கொண்டிருக்கின்றன.

இந்தச் சூழலில், பசு, காளை, எருமை, ஒட்டகம் உள்ளிட்டவற்றை இறைச்சிக்காக விற்பதைத் தடை செய்து உத்தர விட்டிருக்கிறது மோடி அரசு. சந்தைக்கு மாடுகளைக் கொண்டுசெல்பவர்கள் கையில் வைத்திருக்க வேண்டிய ஆவணங்கள் உள்ளிட்ட சிவப்பு நாடா நடைமுறைகள் நடைமுறைச் சாத்தியம் இல்லாதவை. அப்படியே வைத்திருந்தாலும், அதிகாரிகளை முந்திக் கொண்டு அவற்றைச் 'சரிபார்க்க'வும், 'விதிமீறலில் ஈடுபடுபவர்'களைத் தெருவிலேயே வைத்து அடித்துக் கொல்லவும் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள் பசுப் பாதுகாவலர்கள்.

**எங்கே சென்றுகொண்டிருக்கிறது இந்தியா?**

– வி.அருணாச்சலம்


# மக்கள் விசாரணை (மாதஇதழ்)

## சந்தாதாரர் ஆக வேண்டுமா?

கீழ்கண்ட சந்தா படிவத்தை பூர்த்தி செய்து, தேவையான சந்தாவை குறிப்பிட்டுக் கீழே உள்ள விலாசத்துக்கு அனுப்பவும்.

### சந்தா படிவம்

பெயர் : ..........................................................

முழு முகவரி : ..........................................................

..........................................................

தொலைபேசி எண். : ..........................................................

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு சந்தா (தமிழ்நாடு) | ரூ. 110/- | ☐ |
| மூன்று ஆண்டு சந்தா (தமிழ்நாடு) | ரூ. 360/- | ☐ |
| ஓர் ஆண்டு சந்தா (வெளிநாடு) | ரூ. 1000/- | ☐ |

**MAKKAL VISARANAI, Current A/C. 14920200000953, IFSC Code IOBA0001492, Indian Overseas Bank, K.K. Nagar Branch** என்ற வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தி ரசீதை ஜெராக்ஸ் அனுப்பினால் போதுமானது.

மேலும் விபரங்களுக்கு

**மக்கள் விசாரணை** (மாத இதழ்)

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை – 600 078.

**Email : news@makkalvisaranai.com** போன் : 044 - 4354 2611, செல் : 93821 33334




**ஒரு கட்டத்தில் ஆற்காடு நவாபா? மருதநாயகமா? யாருக்கு முக்கியத்துவம் கொடுப்பது? யாருக்கு பணிவது? என முடிவெடுக்க வேண்டிய தருணம் ஆங்கிலேயர்களுக்கு வந்தது.**

திறமையற்றவராக இருந்தாலும் 'நவாப்' அந்தஸ்த்தில் இருப்பதால் ஆற்காடு நவாபுக்கே முன்னுரிமை கொடுப்பது என்ற முடிவுக்கு வந்தனர்.

அது தங்கள் நிம்மதிக்கு கேடாக வந்த முடிவு என்பது அப்போது தெரியவில்லை!

**உத்தரவு பறந்தது!**

மிஸ்டர் மருதநாயகம் இனி நீங்கள் வசூலித்த கப்பத்தை ஆற்காடு நாவாபிடம் தான் ஒப்படைக்க வேண்டும் என்றார்கள்! அதுவரை ஆங்கிலேயர்களிடம்நேரிடையாக கப்பத்தை செலுத்திக் கொண்டிருந்த மருத நாயகத்துக்கு கோபம் பீறிட்டது, கொதித்து எழுந்தார். தன் ஆற்றலையும், தியாகங்களை யும் மறந்து விட்டு ஓர் அடிமைக்கு ஆதரவாக ஆங்கிலேயர்கள் நடந்து கொண்டதை அவரால் பொறுக்க முடியவில்லை. சிங்கமும், சிறு நரியும் சமமாக முடியுமா? உயர உயரப் பறந்தாலும் குருவி பருந்தாக முடியுமா?

**மதுரைப் போர்!**

முடியாது! முடியவே முடியாது! ஆற்காடு நவாபிடம் மட்டுமல்ல உனக்கும் கப்பம் கட்ட முடியாது என்று ஆங்கிலேயர்களுக்கு சவால் விட்டார் மருதநாயகம். புயல் உருவானது! போர் மேகங்கள் சூழ்ந்தன!

1763 ஜனவரி 9 அன்று தனது கோட்டை யில் பறந்த ஆங்கிலேயர் கொடியை இறக்கி, அதிகாரப்பூர்வமாக தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார். ஆங்கிலேய கொடி எரிக்கப்பட்டது! போர் வீரனாக, சிறந்த ஆட்சியாளனாக திகழ்ந்த மருதநாயகம், தன்னை சிறந்த ராஜ தந்திரியாகவும் காட்ட வேண்டியதை உணர்ந்தார். கோட்டையில் அவரது கொடியான மஞ்சள் கொடியை ஏற்றியதோடு, பிரெஞ்சுக்காரர்களின் கொடி யையும் சேர்த்து தன் கோட்டையில் பறக்க விட்டார்! எதிரிக்கு எதிரி நண்பன்! பழைய நட்பை புதுப்பித்துக் கொண்டார். பிரெஞ் சுக்காரர்களின் உதவியை நாடினார்.

தக்காணத்தை ஆட்சி செய்த தக்காண நிஜாம் அலி, தனது கவர்னராக மருதநாய

கத்தை அங்கீகரித்தார். இது ஆங்கிலேயர்களையும் ஆற்காடு நவாபையும் திகைப்பில் ஆழ்த்தியது.

### சிவகங்கை சிக்கல்

ஆங்கிலேயர்களுக்கும், மருதநாயகத்திற்கும் இடையே பகை முற்றியது, இருதரப்பும் தங்கள் ஆதரவு பலத்தை பெருக்க திட்டங்களை வகுத்தார்கள். குறுநில மன்னர்களை வளைத்தார்கள். அப்போது மருதநாயகத்துக்கு சவால் சிவகங்கையிலிருந்து உருவானது. மருதநாயகத்திற்கு கட்டுப்பட சிவகங்கை சமஸ்தானம் மறுத்தது.

சிவகங்கை, திருபுவனம், பார்த்திபனூர் ஆகியவை தனக்குட்பட்டவை என்ற மருதநாயகத்தின் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டது, சிவகங்கையின் மன்னராக முத்துவடுகையர் இருந்தாலும், அவரை இயக்கி மறைமுக நிர்வாகியாக இருந்தவன் தாண்டவராயன் என்பவன்! அவன், ஆற்காடு நவாபுக்கும், மருதநாயகத்திற்கும் இடையேயிருந்த பூசலை பயன்படுத்திக் கொண்டு, ஆற்காடு நவாபின் உதவியை பெற்றான்.

அவன் தந்திரத்தில் கெட்டிக்காரன். மருதநாயகத்தின் மனைவிக்கு பொன்னும் பொருளும் அனுப்புவதாக ஆசை வார்த்தை காட்டி, மருதநாயகத்தை சரிப்படுத்துமாறு தூதுவிட்டான். அரண்மனை வழியாக நுழைய முடியாதவன், அடுப்பங்கரை வழியாக நுழைய முயற்சித்தான். அதையும் மருதநாயகம் முறியடித்தார்.

சிவகங்கை மன்னர் முத்துவடுகையர், தனது தளபதியான தாண்டவராயனிடம், எதற்கப்பா வம்பு! பேசாமல் மருதநாயத்திடம் அவர் விரும்பும் பகுதிகளை கொடுத்து விடுவோம்! என்றார். காரணம், அவர் பயந்த சுபாவம் கொண்டவர்! ஆனால் தாண்டவராயன் திருபுவனத்தில் ஆட்சியாளராக இருந்த தாமோதரனையும் அழைத்துக் கொண்டு ஆற்காடு நவாபுடன் கூட்டணி சேர்ந்தார்.

கோபம் கொண்ட மருதநாயகம் திருபுவனத்தையும், பார்த்திபனூரையும் தாக்கினார். சிவகங்கை அரண்மனைக்கு தீவைத்தார். நிலைமை முற்றுவதை அறிந்த சிவகங்கை மன்னர் முத்துவடுகையர் குலை நடுங்கி போனார். தன் தளபதியின் தேவையற்ற வம்பால் தன் ஆட்சிக்கே ஆபத்து வந்து விட்டதே என நடுங்கினார்.

முத்துவடுகையர் ஆற்காடு நவாபிடம் உதவி கோரினார். ஆற்காடு நவாபின் வேண்டுகோளை ஏற்று, ஆங்கிலேயப்படை திருபுவனம் வந்தது. மருதநாயகத்தின் அதிரடி யுத்தத்திற்கு முன்னால் தாக்குப்பிடிக்க முடியாத அவர்கள் ஓடி ஒளிந்தனர். அடுத்தடுத்து இரண்டு போர்களிலும் மருதநாயகம் வென்று திகிலூட்டினார். நிமிர்ந்து உட்கார்ந்தனர் ஆங்கிலேய தளபதிகள்! விழிகள் மிரள யோசித்தனர்.

ஆங்கிலேயப் படைக்கு தலைமையேற்ற பிரஸ்ட்டன் திணறினார். அவரும், கான்சாஹிபும் முன்னாள் நண்பர்கள்! அதனால் பயம் அதிகரித்தது! காரணம் மருதநாயகத்தின் குணமும், சினமும் தெரியும்! அவர் பயந்த படியே நடந்தது! மூலக்கரை கொத்தளம் அருகே நடந்த ஆங்கிலேயர்களுக்கு எதிரான போரில் வாள் முனையில் நூற்றுக்கணக்கானோரை சீவித் தள்ளினார் மருதநாயகம்! உடைந்த வாள்களும் வீரம் பேசின! ரத்தம் கொட்டின! ஆங்கிலேய தளபதி பிரஸ்ட்டன் சுடப்பட்டு படுகாயமடைந்தார். பின்னர் உயிர் துறந்தார்.

பிரஸ்ட்டனை பெரிதாக நம்பியிருந்த ஆற்காடு நவாப் நிலை குலைந்தார். மருதநாயகம் ஆங்கிலேயர்களை எதிர்த்து போரிடும் செய்தியும், அதன் வெற்றிகளும் மைசூர்மன்னர் ஹைதர் அலிக்கு எட்டியது. அவர் பழைய பகையை மறந்தார். மண்ணுரிமை போரில், தனது நிலைக்கு மருதநாயகம் வந்ததை வரவேற்று வாழ்த்து செய்தி அனுப்பினார்.

**– தொடரும்.**

# JAIYTHUN Holistic Yoga



## FOR HEALTH & PEACE

**Begin your journey with Jaiythun Holistic - Yoga and skill development specialist in holistic approach to fitness, health awareness & well being. She combines Asanas, Pranayamas, Physiotherapy & Kriyas with cardiovascular training.**

**ENROLL TODAY WITH JAIYTHUN HOLISTIC YOGA !!!**







**Yoga relieves from many body aliments like :**

- Weight Reduction and tone Your Body
- Stress, Hypertension, Psychological Problems
- Diabetes, Depression
- Chronic Backache, Sciatica, Arthritis
- Slips disc and Spondylitis
- Wheezing, Sinus, Asthma, Allergies
- Gas & Acidity Problems, Headache, Migraine
- Insomnia (Sleeplessness), Improving Immunity
- Thyroid Problems, Gynecological Problems
- All kinds of prayer, Tharanai, Meditation and Ekakaramam
- Lighting Meditation, Body Breath mind & Thoughts relax programme

**LADIES CLASSES** **GROUP CLASSES**

**ONE TO ONE CLASSES**

For Detailed information please contact us

**Cell : 95786 24188**

Office : No.27, East Sambandam Road, R.S. Puram, Coimbatore - 641 002.
Branch : S Block 162A, Kovalpudur, Opp. to Eye Care, Coimbatore - 641 042.

# தமிழைக் கட்டாயமாக்குவதில் என்ன தயக்கம்?




கேரளத்தையடுத்து மேற்கு வங்கமும் பள்ளிக்கூடங்களில் தாய்மொழியைக் கட்டாயப் பாடமாக்கி உத்தரவிட்டிருக்கிறது. மொழியுரிமைப் போராட்டத்தில் இந்தியாவுக்கே முன்னோடியாக இருந்த தமிழ்நாடு, தமிழ்மொழியைக் கட்டாயப் பாடமாக அறிவிப்பதற்கு ஏன் இன்னும் காலம் தாமதம் செய்கிறது என்று புரியவில்லை.

கேரள அரசு மலையாளம் கட்டாயமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்ற அவசரச் சட்டத்தை ஏப்ரல் மாதத்தில் இயற்றியது. இதன்படி, கேரளத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 10-ம் வகுப்பு வரை இனி மலையாளப் பாடம் கட்டாயம். அது எந்தக் கல்வி வாரியத்தின் கீழ் இயங்கும் பள்ளியாக இருந்தாலும் சரி, “மலையாளம் சொல்லித் தராத பள்ளிகளுக்கான அனுமதி ரத்து செய்யப்படும்'' என்று சொல்லிவிட்டார் முதல்வர் பினராயி விஜயன். மேலும், “பள்ளிகளில் மலையாளத்தில் பேசுவதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ எந்தப் பள்ளி நிர்வாகமும் தடை விதிக்கக் கூடாது'' என்பதையும் இந்தச் சட்டம் உறுதிசெய்கிறது.

இந்நிலையில், வங்கத்திலும் பள்ளிக் கூடங்களில் வங்க மொழி கட்டாயம் என்று உத்தரவிட்டுள்ளார் முதல்வர் மம்தா பானர்ஜி. “வங்காளம், இந்தி, ஆங்கிலம், உருது, குர்முகி, நேபாளி, சந்தாலி ஆகிய மொழிகளில் எதை வேண்டுமானாலும் மாணவர்கள் தங்களது முதல் மொழியாகத் தேர்வுசெய்து கொள்ளலாம். இரண்டாவது, மூன்றாவது மொழிகளையும் அவர்களது விருப்பம்போலத் தேர்வு செய்துகொள்ளலாம். ஆனால், இந்த மூன்று மொழிகளில் வங்காளியும் ஒன்றாக இருக்க வேண்டும்” என்ற முதல்வர் மம்தாவின் அறிவிப்பு, மூன்று மொழிக் கொள்கைக்குப் புதிய பரிணாமத்தை அளிக்கிறது. ஒருபுறம் வங்க மொழியைத் தவிர்க்க முடியாது என்ற நிலையை உருவாக்கியிருக்கும் அவர், இரண்டாவது, மூன்றாவது மொழிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை மாணவர்கள் பக்கம் திருப்பியிருக்கிறார்.

தாய்மொழியில் அடிப்படைக் கல்வி பயில்வது கற்கும் திறனை அதிகரிக்கச் செய்கிறது என்று கல்வியாளர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். தாய்மொழியைக் குறைந்தபட்சம் ஒரு பாடமாகவேனும் மாணவர்களுக்குக் கற்பிப்பது மிக மிக அவசியமான ஒன்று.

மேலும், இந்தியைக் கட்டாயப் பாடமாக்க மத்திய அரசு முயற்சித்துவருகையில், இந்தி பேசாத மாநிலங்கள் தங்களது மொழியுரிமையைப் பாதுகாத்தாக வேண்டிய சூழலும் உருவாகியுள்ளது.

இந்நிலையில், மாநிலத்தின் பெரும்பான்மை மக்கள் பேசும் மொழியை பாடத்திட்டத்தில் கட்டாயமாக்கியிருக்கும் பினராயி விஜயனும், மம்தா பானர்ஜியும் பாராட்டுக்குரியவர்கள். கேரளம், மேற்கு வங்கத்தையடுத்து அஸ்ஸாம் மாநிலத்திலும்கூட அஸ்ஸாமிய மொழியைக் கட்டாயப் பாடமாக்குவதற்கான முயற்சிகள் நடந்துவருகின்றன. அஸ்ஸாமில் மொழிச் சிறுபான்மையினர் வங்காளி அல்லது போடோ மொழிகளைத் தேர்வுசெய்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகமும் தமிழ்மொழியைப் பள்ளிகளில் கட்டாயமாக்க வேண்டும். கோடை விடுமுறை முடிந்து ஜூன் மாதத்தில் பள்ளிகள் திறப்பதற்கு முன்பாகவே அரசு இவ்விஷயத்தில் ஒரு உறுதியான முடிவெடுத்தாக வேண்டும். அப்போதுதான் பாடத்திட்டம், ஆசிரியர் நியமனங்கள் ஆகியவற்றைப் பள்ளி நிர்வாகங்கள் திட்டமிடுவதற்கும் வசதியாக இருக்கும்.

– ராம்குமார்



# சிந்தனை முத்துக்கள்..!

## கரண்ட் டச்

காருக்கு போடுற பெட்ரோல
உற்பத்தி பண்ணும் நாடு
செழிப்பா இருக்கு!
வயித்துக்கு சோறு உற்பத்தி
பண்ணுற நாடு மட்டும்
எப்பவுமே வறுமையில
இருக்கு??

## அது என்னடா

தமிழ் நாட்டுல
ஸ்டேட் பாங்க ஆப் திருவாங்கூர் இருக்கு...
ஸ்டேட் பாங்க ஆப் பஞ்சாப் இருக்கு...
ஸ்டேப் பாங்க் ஆப் ஐதராபாத் இருக்கு...
ஆனா ஸ்டேட் பாங்க தமிழ்நாடு மட்டும் இல்ல...

## விடா முயற்சி...

1988-ல் சச்சின்
10ஆம் வகுப்பு ஆங்கில
பாடத்தில் ஃபெயில்...
2016-ல் பத்தாம் வகுப்பு
ஆங்கில பாடத்தில்
முதல் பாடத்தின் பெயர்
சச்சின் டெண்டுல்கர்



## ஒரே பீலிங்க்ஸ்...

ப்ளஸ்டு பாஸ் ஆனவன் எல்லாம்
சம்பளம் வாங்குற வேலைக்கு போறான்.
ஃபெயில் ஆனவனெல்லாம் தொழில்
அதிபராகி பாஸ் ஆனவனுக்கு
வேலை கொடுக்கிறான்.
படிக்காதவனெல்லாம்
அரசியல்வாதியாகி
பாஸ் ஆனவனையும்
பெயில் ஆனவனையும்
ஆட்சி பண்றான்!
இப்ப முடிவு பண்ணுங்க?

## சார் ஒரு நிமிஷம்

**ஆசிரியர்** : நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுவதற்குக் காரணம் என்ன?

**மாணவன்** : மக்கள் தொகை பெருக்கம்

**ஆசிரியர்** : அப்படின்னா மக்கள் தொகை பெருக்கத்துக்கு காரணம் என்ன?

**மாணவன்** : வேலையில்லா திண்டாட்டம்தான்.

## வாழும் கடவுள்

கதவு ஜன்னலை
மூடுறவன் மனுஷன்
டி.வி. வேல்யுமை கூட்றவன்
பெரிய மனுஷன்
சட்டையப் போட்டுகிட்டு
வெளிய போறவன் ஞானி...
காதில எதுவுமே விழாத மாதிரி
உட்காத்திருக்கிறவன் கடவுள்.

## ஆ.தே.மு.பஞ்ச்...

### பசுமை ஜனநாயகம்

நினைத்தாலே முக்திதரும்
அருணை கிரிவலப் பாதையில்
நிழல் தந்த மரங்களுக்கு
முக்தியை கொடுத்தது
பசுமை ஆணையம்!

### நீதி தத்துவம்

10 கோடி கொடுத்து
நீதிபதி வேலை வாங்கும்
நீதிபதிகளிடம் நியாயம்
எப்படி கிடைக்கும்.

### விசாரணை?

500 ரூபாய் கள்ள நோட்டுக்கு
ஒரு ஆட்டோ காரன புடிச்சி தீவிரமா
விசாரிக்க தெரியும்...
ஆனா கண்டெய்னர்ல
காணாமல்போன 570 கோடி
ரூபாய் திருட்டுப்பணத்தைப்
பத்தி போலீஸ் இன்னைக்கி
வரைக்கும் வாயக்கூட தொறக்கல?

### மனம் ஒரு பேய்?

தவறான வழியில் பிறந்த
குழந்தையை குப்பைத் தொட்டியில்
வீசியெறியும் இச்சமூகம்!
தவறான வழியில்
வந்த பணத்தை மட்டும்
ஏனோ குப்பைத் தொட்டியில்
வீசி எறிவதில்லை?

### இந்தியா

இந்தியா
ஏழை நாடு அல்ல
அரசியல்வாதிகளால்
ஏழையாக்கப்பட்ட
நாடு!

### சிறந்த ஜோடி

உகத்திலேயே
சிறந்த ஜோடி செருப்புதான்.
ஒன்றை பிரிந்தால்
மற்றொன்று
வாழவே வாழாது!

### ருசி

காதல் என்பது கருவாடு மாதிரி
ஊரே நாறினாலும்
காதலிக்கறவங்களுக்கு
ருசியாதான் இருக்கும்.

## நோ கமெண்ட்ஸ்...






மே மாதம் தொடர்ச்சி...

# குமாரனுக்கு அருளிய கணநாதன்

நம்பி மீது அப்பாவுக்கு அப்போது நம்பிக்கை வந்து மகிழ்ந்தார்.

மன்னவா இந்த ஏழையின் இல்லம் தங்கள் வருகையால் மகிமை பெற்றதாகிறது. தாங்கள் வரப்போவதை முன்னதாகச் சொல்லி அனுப்பியிருக்கக் கூடாதா? தங்களைத் தகுந்த விதத்தில் உபசரிக்க முடியாது போய்விட்டதே இந்த ஏழையை மன்னிக்க வேண்டும் என்று வேண்டினான்.

பல்லக்கிலிருந்து இறங்கிய அரசன் நம்பியின் வார்த்தையை காதில் வாங்கிக் கொள்ளாமல் இருகைகளையும் கூப்பியபடி நம்பியை வணங்கினான். விநாயகப் பெருமானின் அருள் பெற்ற மாணிக்கமே எனது பணிவான வணக்கத்தை ஏற்றுக்கொண்டு என்னை கௌரவிக்க வேண்டும் என்று வேண்டினான்.

எதிர்பாராது நடக்கும் இந்த சம்பவத்தைக் கண்டு திகைத்துப்போய் விநாயகர் பெருமானின் நினைவில் சூழ்ந்தார். பின்னர் தெளிந்து அரசனை மீண்டும் வணங்கி, என்னிடம் தாங்கிக் கொண்டுள்ள அபிமான அன்பினால் திக்கு முக்காடி விட்டேன். தங்கள் வருகை குறித்து விசாரிக்க மறந்து விட்டேன் என்னாள் ஆக வேண்டிய காரியம் இருப்பின் தயக்கமில்லாமல் சொல்லுங்கள் என்றார் நம்பி.

நம்பி படைத்த நிவேதனத்தை பிள்ளையார் சாப்பிட்ட செய்தி ஊர் உலகமெங்கும் பரவியது. "நம்பி ஆண்டார் நம்பி" என்று அனைவரும் போற்றினார்கள்.



விநாயகரின் திருஅருட்பிரசாதத்தால் நம்பி சகல கலைகளிலும் தானாக தேர்ச்சி பெற்று உயர்ந்தார்.

நம்பிக்கு பொல்லாப்பிள்ளையார் அருளிய செய்தி சோழமன்னர் ராஜராஜசோழனுக்கு எட்டியது. முதலில் இச்செய்தியை அவன் நம்பவில்லை. ஆனால் நாரையூரிலிருந்து வந்தவர்கள், இந்த விபரம் உண்மையில் நடந்தது என தெரிவித்தனர்.

அதன்மீது அரசனுக்கும் ஓர் ஆவல் இருந்தது. திருவமுது செய்த பிள்ளையாரை நேரில் தரிசித்து தான் படைக்கும் உணவையும் அவரை உட்கொள்ளச் செய்ய வேண்டும் என்று விரும்பினான். உடனே பரிவாரங்களுடன் திருநாரையூருக்கு புறப்பட்டான். ஊரை அடைந்ததும் நேராக நம்பியின் வீட்டுக்குச் சென்றான்.

அரசன் தம் இல்லத்திற்கு வருகிறான்



# அற்புத ஆலயங்களின் ஸ்தல வரலாறு!

ஆன்மிக தொடர்-3

ஸ்ரீ செண்பகவள்ளி உடனுறை
ஸ்ரீ காரணீஸ்வரர் திருக்கோயில்
காக்களூர்



காக்களூர்
த. துரைபாபு

என்பதை அறிந்ததும் ஓடிவந்து வாசலில் வரவேற்றான்.

அதன்பின் அரசன் பேச ஆரம்பித்தான். ஐயன்சீடர் தங்களுக்கு அருள்செய்து தங்களால் படைக்கப்பட்ட நிவேதனத்தை அன்புடன் அமுது செய்து அருளிய விநாயகர் பெருமானை நானும் தரிசித்து காண்பதற்கரிய அக்காட்சியை நானும் கண்டுகளிக்க அருள் செய்ய வேண்டும் என்று பிராத்தித்தான்.

பிரபு உங்களின் திருஉள்ளம் இதுவோ என்று மனதிலே விநாயகரை தியானித்தார் நம்பி.

அன்று மாலை பூஜையின்போது விநாயகப் பெருமான் நம்பியின் பிரபாவத்தை உலகுக்கு எடுத்துக்காட்டும் வண்ணமாக, மன்னன் ராஜ ராஜன் படைத்த திருவமுதினை அமுதுசெய்து அருளினார். மன்னன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வடித்தான். நம்பியை பலமுறை வணங்கி, சுவாமி எம்பெருமான் தங்கள் ரூபத்தில் எழுந்தருளியுருப்பதாக உணருகிறேன். என் உள்ளத்தில் நீண்ட நாளாக ஒருகுறை உள்ளது. தாங்கள் தான் அதை நிவர்த்தி செய்ய முடியும்.

சமய குறவர்கள் மூவர் அருளிக்கும் தேவாரத் திருமுறைகள் வழக்கொழிந்துள்ளன. தாங்கள் தான் அவற்றை நிலைபெறுமாறு செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்தான் பிரபு. கணநாயகா, அரசன் மூலமாக உன் விருப்பத்தை தெரிவித்துவிட்டாய். ஆனால், அதைப்பற்றி விபரம் அறியேன். தேவாரத் திருமுறைகள் இருக்கும் இடத்தையும் திருத் தொண்டர்கள் வரலாற்றையும் நீதான் எனக்கு அருளிச் செய்ய வேண்டும் என்று விநயாகரை வணங்கினார் நம்பி.

அப்போது அசரி ஒன்று எழுந்தது. தில்லை பொன்னம்பலத்தில் மூவருடைய கைகளின் இலைச்சினை வைக்கப்பட்டுள்ளன. அறையிலே தேவாரத் திருமுறைகள் வைத்துப் பூட்டப் பட்டுள்ளன என அசரீரியில் ஒலித்தது.

மறுநாள் ராஜராஜன் நம்பியையும் அழைத்துக் கொண்டு தில்லைக்குப் புறப்பட்டான். அவர்கள் வருகையை அறிந்த தில்லைவாழ் அந்தணர்கள் பூர்ண கும்பத்தோடு நகர எல்லையில் காத்திருந்து அவர்களை வரவேற்றனர். அரசன் நம்பியோடு ஆலயத்தினுள் நுழைந்து எம்பெருமானை சேவித்தான். பின்னர் தில்லைவாழ் அந்தணர் களிடம் தாங்கள் அங்கு விஜயம் செய்திருப் பதின் நோக்கத்தை எடுத்துரைத்தான்.

நம்பியைப் பற்றி தில்லைவாழ் அந்தணர் கள் முன்னமேயே அறிந் திருந்தனர். ஆகவே அவர்கள் நம்பியை நேரில் சந்தித்து பற்றிப் பெரிதும் மகிழ்ச்சி அடைந்னர். நாட்டிலே வழக்கொழிந்துள்ள தேவாரத் திருமுறைகளைத் திரும்பவும் நிலை நிறுத்த அரசன் எடுத்துக்கொண்ட முயற்சியை அவர்கள் மிகவும் பாராட்டினர்.

ஆயினும் அதற்கொரு தடையிருப்பதை நினைக்கும்போது அவர்களால் வருத்தப் படாமலிருக்க முடியவில்லை. பொன்னம்பலத்து அறையிலே பூட்டி வைக்கப்பட்டுள்ள தேவாரத் திருமுறைகள் அன்றையத் திறப்பதனால் மூவரும் ஒருங்கே எழுந்தருளியிருக்க வேண்டும். இல்லையேல் பூட்டை உடைக்க யாருக்குமே உரிமை இல்லை.

தான் மேற்கொண்ட மகத்தான திருப்பணிக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதை அறிந்தபோது ராஜராஜன் சொல்லொனா வருத்தம் கொண்டு ஆயினும் அவன் வருத்தம் சிறிது நேரமே நிலைத்தது பளிச்சென்று அவன் உள்ளத்தில் ஒரு யோசனை தோன்றியது. ஆலயத்திலேயே வைக்கப்பட்டுள்ள சமயக்குறவர் மூவருடைய விக்கிரகங்களுக்கும் அபிஷேக ஆராதனை செய்விக்கும்படி சொன்னான். அவை முடிந்ததும் மேளதாளங்களுடன் மூவரையும் வீதி புறப்பாடு செய்வித்துத் தேவாரத் திருமுறைகள் வைக்கப் பட்டுள்ள அறையின் முன்பு கொண்டு வந்து நிறுத்தினான்.

அந்தணப் பெருமக்களே உங்கள் வேண்டு கோள்படி மூவரும் ஒருங்கே எழுந்தருளியிருக் கிறார்கள் இனியும் பூட்டை திறக்க ஆட்சேய பனை என்ன இருக்கப் போகின்றது. என் விருப்பம் நிறைவேற ஆண்டவனே அசரீரி மூலம் சொல்லி இங்கே எங்களை அனுப்பியிருக்கிறான். இறைவன் விருப்பத்தை நீங்களும் ஆலோசித்து அவ்வாறே நடப்பீர்கள் என்றே நம்புகிறேன்

என்று பிரார்த்திதான் அரசன்.

அரசனுடைய கோரிக்கையை ஏற்று அவர்கள் அறைக் கதவைத் திறந்தார்கள். பெருமானே தாங்களே அறையினுள் சென்று திருமுறைகளை எடுத்து வாருங்கள் என்று அரசன் நம்பியை வேண்டினான். நம்பியும் அறையினுள் சென்று அங்கே வைக்கப்பட்டிருந்த ஏடுகளை வெளியே கொணர்ந்தார் என்ன துரதிஷ்டம் ஏடுகளில் சில பகுதிகள் கரையானால் சாப்பிடப்பட்டு பழுதடைந்து போயிருந்தன.



மகிழ்ச்சியில் திளைத்திருந்த அரசன் அந்த பழுதடைந்த ஏடுகளைக் கண்டதும் துயரமே வடிவாயினான். நம்பியின் உள்ளமும் வருத்தத்தில் ஆழ்ந்தது. வருந்த வேண்டாம் இக்காலத்துக்குத் தேவையானவற்றை மட்டும் விட்டு, மற்றவையாவையும் யாமே சொல்லிக்கச்செய்தோம் என்ற அசரீரி வானிலே எழுந்தது.

கவலை கொண்டிருந்த அரசன் அசரீயைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தான். நம்பியை வணங்கி பெருமானே இனி தாங்கள் தடை யின்றித் தொடங்களாம் என்று வேண்டினான்.

நம்பியாண்டார் நம்பி பொன்னம் பலத்தாடும் பெருமானை சேவித்துத்தம் திருமுறைப் பணியைத் தொடங்கினார். அரசனின் நெடுநாளைய விருப்பம் நிறைவேறியது.


இந்த வரலாற்று மூலமாக விநாயகப் பெருமானின் எலி வந்த கருணை நம்பினோர்களுக்கு எதையும் செய்யும் ஆற்றலை வழங்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது.


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : news@makkalvisaranai.com
போன் : 044 - 4354 2611, செல் : 9382133334


அருணையில் ஓர் அற்புதம்!
வாருங்கள் வரவேற்கிறோம்..
Green Mountain
Agro Form India Ltd
சிறுதுளி பெருவெள்ளம்
இன்றைய சேமிப்பு
நாளைய பாதுகாப்பு
எங்கள் நிறுவனத்தில்
முதலீடு செய்யுங்கள்
நல்ல லாபத்தை
காணுங்கள்!
வாருங்கள் வரவேற்கிறோம்
இன்றே முதலீடு செய்யுங்கள்!
S.கோபி, M.D.,
Green Mountain Agro Form India Ltd
18/4, Lakshmipuram, Thiruvannamalai.
Cell : 98945 04637

ஆ.மவுரியன்

11

ஓஎஸ் பளீஸ் வாங்க என்று
ஓட்டல் பின்புறத்திற்கு அழைத்துச் சென்று
திறந்து காட்ட அந்த
ஓட்டல் ஓனரை அந்த தொட்டியில்
தள்ளிவிட்டு மூடியை
மூடினான் தமிழரசு.

தமிழரசு பைக்கில் அவனது வீட்டிற்கு வந்தான், திறந்திருந்த வீட்டிற்குள் பைக்கை நிறுத்தி விட்டு உள்னே சென்றான். அப்பொழுது ஒரு போன் வந்தது, தமிழரசு அந்த போனை எடுத்தான் மறு முனையில் தமிழரசு உன் அப்பா பேசுறன்பா, உனக்கு பொண்ணோட போட்டோ அனுப்பி இருக்கேன் அதைப் பார்த்து உன் அபிப்ராயத்தை சொல்லுங்கள், மத்தத நான் பார்த்துக்கிறேன், சரிப்பா. நான் இப்ப பார்க்க முடியாது, தூங்க போறேன் நாளைக்கு காலையில பார்த்துச் சொல்றேன் என்று போனை வைத்துவிட்டு கதவு, ஜன்னல்களை மூடிவிட்டு தூங்குவதற்கு முன் மீண்டும் ஒருமுறை பேனை இழுத்து பார்த்துவிட்டு கட்டிலில் படுத்துக்கொண்டான்.

விடியற்காலை சுமார் நான்கு மணி இருக்கம், தமிழரசு வீட்டின் அருகில் 5 ஆடி காரில் சபாரி டிரஸ்ஸில் ஐடெக் ஆசாமிகள் காரை நிறுத்திவிட்டு இறங்கினார்கள். சுமார் 20–க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இருப்பார்கள். ஒவ்வொருவரும் நல்ல உடற்கட்டுடன் முறுக்கேறிய உடலை வைத்திருந்தார்கள்.

சிறிது நேரத்தில் தமிழரசுவை குண்டுக்கட்டாக தூக்கிக்கொண்டு வந்தார்கள். காரில் உக்கார வைத்து விட்டு கார் புறப்பட்டது. தமிழரசு தூக்கத்தில் இருந்தான்.

1 மணிநேரத்தில் எண்ணூர் துறை முகம் சாலையில் நுழைந்து கார் ஏற்றுமதி செய்யும் கடல் தளத்திற்கு ஆடிக்கார்கள் நுழைந்தது. அங்கு சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கார்கள் பல வண்ண நிறத்தில் முன்னணி கம்பெனிகளின் சார்களை கப்பலில் இராட்சத பொக்லைன் இயந்திரம் தூக்கி அடுக்கிக் கொண்டிருந்தது. இரண்டு பக்கம் கடல் நடுவே ஒரு சுண்ணாம்பு காண்கிரீட் சாலை 100 அடிக்கு குறையாமல் இருந்தது, ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் காண்கிரீட் பாறைகளை தடுப்புகளாக போடப்பட்டிருந்தது. ஒரு ஹமர் கார் வெள்ளை நிறத்தில் நின்று கொண்டிருக்க அதில் இருந்து 6 அடிக்குமேல் ஒரு இரும்பு இளைஞன் நின்று கொண்டிருந்தான். அவன் இருக்கும் இடத்தில் இருந்து 50 அடி தூரத்தில் ஐந்து ஆடி கார்களும் நின்றது. அதிலிருந்து சபாரி டிரஸ் இளைஞர்கள் இறங்கினார்கள்.

தூக்கக் கலக்கத்தில் இருக்கும் தமிழரசுவை இரண்டு இளைஞர்கள் அழைத்து தமிழரசுவின் அருகில் அந்த ஆறடி உயர இளைஞன் வந்து நின்றான். ஒருவன் பிஸ்லரி வாட்டர் பாட்டில் அதிகமான கூலிங்கில் எடுத்து வந்து அவனிடம் கொடுத்தான். பாட்டிலின் மூடியை கழட்டி விட்டு தண்ணீரை தமிழரசுவின் மூஞ்சியில் ஊத்தினான். நான் யார் தெரியுதா? என்றான், தமிழரசு தூக்கம் கலைந்து தெளிவாக அவனை

# கருநிற காக்கிகள்

பார்த்து உள்ளுக்குள் அதிர்ச்சி அடைந்தான், இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள் ளாமல் தெரியும் என்றான். இல்ல என்னை உனக்கு தெரியவாய்ப்பில்லைஎன்றான்அப்துல் ரஷீத். அப்படின்னா நமக்குள் ஒரு டீல் வச்சிக் கலாம் நான் கரெக்டா நீ யாரு, உன் பிளான் என்ன எதுக்கு இங்க வந்துயிருக்கிற, என்ன ஏன் தூக்கிட்டு வந்திருக்கிறன்னு கரெக்டா சொல்லட்டுமா? என்று தமிழரசு கேட்க? அப்துல் ரஷீத் சரி என்று சொல்ல, நான் கரெக்டா சொல்லிட்டா நான் சொல்றத நீ செய்யனும், சப்போஸ் நான் கரெக்டா சொல் லைனா நீ சொல்றத நான் கேட்பேன். என்ன எப்படி வேனாலும் நீ யூஸ் பண்ணிக்கலாம், டீல் ஓகே?, ஓகே நீ சொல்லு பாக்கலாம், உன் பேரு அப்துல் ரஷீத். இந்தியாவையே அச்சுருத்தும் நிழல் உலக தாதா உனக்கு பின்னால் சுமார் லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் இருக்கிறார்கள். நீ சொன்னா எதையும் செய்ய இந்த உலகம் முழுவதும் செய்யத் தயாராக இருக்கிறது.

இந்தியா, அமெரிக்கான்னு 30–க்கும் மேற் பட்ட நாடுகள் உன் தலைக்கு அதிகமான விலை வச்சி இருக்காங்க, உன் பேரு சமீப கால மாகவே உலகம் பூரா பரவியிட்டு இருக்கு, காரணம் தெரிஞ்சா உடனே தண்டனையை கொடுத்திடுவேன், அதனால் என்னை ஒரு பக்கம் பல தீவிரவாத அமைப்புகள் துரத்திக் கிட்டு இருக்கு. என்னை ஏன் தூக்கிட்டு வந்தி ருக்கிறீங்க, என் மூலமா உனக்கு ஒரு காரியம் ஆகணும், அது என்னன்னு சொல்லட்டுமா?

உன்னோட திட்டம் அனைத்தும் என்னை வச்சு ஆபரேஷன் சக்சஸ் பண்ண திட்டம் போட்டுயிருக்க ஐயம் ரைட்!, வெரிகுட் வெரி க்ளியர், நீ என்னை நம்பனுதுக்கு நான் என்ன செய்ய னும் என்று ஹிந்தியில் கேட்டான் அப்துல் ரஷீத். என்னைச் சுத்தியிருக்கிற உன் ஆளுங்கள எல்லாம் நீ கொல்லணும் அப்புறம் டீலிங் முடிவு பண்ணிக்கலாம் என்றான் தமிழரசு. அப்துல்ரஷீத்அதிர்ச்சி ஆகிவிட்டான். என் கூட இருபது வருஷமா இருக்காணுங்க வேற ஏதாவது சொல் நான் செய்றேன், இல்லை பாசத்துக்கு, அன்புக்கு அடிமை யாயிட்ட உன்னால இனிமே எதையும் சாதிக்க முடியாது.

உலகத்துக்கு நன்மை செய்யுனும், ஈவு, இரக்கம், கருணை இது எதுவுமே நம்மகிட்ட இருக்கக்கூடாது என்று சொல்லும்போதே தமிழரசுவின் அருகில் இருந்த இருபது பேரை யும் சுட்டுத்தள்ளி விட்டான், அப்பொழுது உலகையே நடுங்க வைத்துக் கொண்டிருக்கும் தாதா அப்துல் ரஷீத் தனியாக நின்று இருந் தான். தமிழரசு அவன் அருகில் சென்று இப்ப உன் டீலிங் என்ன என்று கேட்க தன் பாக் கெட்டில் இருந்து ஒரு போட்டோவை தமிழ ரசுவிடம் கொடுத் தான். இந்த பொண்ணு மைக்ரோ சாப்ட்வேர் இன்ஜினியர், இவள் சித்தப்பா இராணுவத்தில் தொழில்நுட்ப பிரிவுல வேலைபார்க்கும் பொழுது அவங்க கூட இருந்து டெல்லியில படிச்சியிருக்கா, பெயர் பூஜா வடேகர், வயது 21, இவளுக்கு இவளுடைய சித்தப்பா பல ராணுவ ரகசிய குறியீடுகளை சொல்லிக் கொடுத்திருக்காரு, அது உங்க கவர்மெண்டுக்கே தெரியாது, அந்த சீக்ரெட் குறியீடு மட்டும் தெரிஞ்சா ஒரு கோடி US டாலர் என் பாக்கெட்டுக்கு வரும், இந்த பூமி என்ன இதுமாதிரி, எத்தனை பூமி வேணும்னாலும் விலைக்கு வாங்கலாம் என்று சொல்லி அந்த போட்டோவை காட்டினான். தமிழரசு அதத வாங்கிப் பார்த்துவிட்டு தன் பாக்கெட்டில் வைத்துக் கொண்டான்.

வாட்டர் கொடுக்க முடியுமா? அப்துல் ரஷீதின் உதவியாளர் வாட்டர் பாட்டிலை கொடுத்தார். தமிழரசு தனது கையில் வாங்கும் பொழுது பாட்டிலை தவற விட்டான், அது கீழே விழுந்து தண்ணீர் கொட்டிக் கொண்டி ருக்க அப்துல் ரஷீது அதை குனிந்து எடுக்க அவன் ஃபேண்ட் பாக்கெட்டிலிருந்து துப்பாக் கியை எடுத்து. அப்துல் ரஷீத் சுட்டுத் தள்ளின ான். அருகில் இருந்த உதவியாளரையும் சுட்டுத் தள்ளினான். துப்பாக்கியில் இருந்த அனைத்து குண்டுகளையும் அப்துல் ரஷீத் உடல் மீது ஜல்லடையாய் துளைத்துக் கொண்டிருந்து, அப்பொழுது அங்கு பத்துக்கு மேற்பட்ட போலீஸ் வாகனம், வந்து கொண்டிருந்தது.

– தொடரும்

**M. SATHYARAJ**
**97902 62821 / 73731 61691**

# SRI SATHI BAJAJ

**Authorised Service Center for Bajaj Auto Ltd.**





- **Two Wheelers**
- **Finance**
- **Service**
- **Spares**
- **Tyres & Insurance**




497-10, Sri Sakthi Complex, Rasipuram Main Road,
Opp - HP Petrol Bunk, Vaiyappamalai, Tiruchengodu-Tk.,
Namakkal Distrcit. - 637 410.

**Tel : +91 04288-233334 / Service : +91 90478 62821**

**Email : srisathibajaj@gmail.com / Web : www.bajajauto.com**



# அம்பேத்கர் கல்வி நூற்றாண்டு இயக்கம்

## AMBEDKAR - KALVI CENTRENARY MOVEMENT

(பட்டியலின உயர்கல்வி மேன்மைக்கான இயக்கம்)

நிறுவனர் : **R.கிறிஸ்துதாஸ் காந்தி** IAS (Rtd)

கூடுதல் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு

**SC/SCA/SCC/ST மாணவ, மாணவிகள் உயர்கல்வி பெற்றிட...**

**பண வசதி இல்லை என்ற காரணத்தினால் மேற்படிப்பு பயிலாமல் இருக்க வேண்டாம்**

**தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் நலத்துறை**

அரசாணை (நிலை) எண். 6, நாள் : 09.01.2012

அரசாணை (நிலை) எண். 92, நாள் : 11.09.2012

அரசாணை (நிலை) எண். 16, நாள் : 24.02.2014

**ஆகிய அரசாணைகளின்படி சுயநிதி கல்வி நிறுவனங்களில் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை (Post Matric Scholarship) பெற்று உயர்கல்வி பயிலலாம்.**

**போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை (Post Matric Scholarship) என்பது மைய அரசுத் திட்டம், மாநில அரசும், மைய அரசும் இச்செலவினத்தைப் பகிர்ந்து கொள்கின்றன.**

"அகம்" - பட்டியலின மாணவ, மாணவிகளுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும், இந்த விவரங்களை எடுத்துச் சொல்லும் பணியில் ஈடுபட்டுள்ளது. மாணவர்கள் கல்லூரிகளில் விண்ணப்பிப்பதற்கும், சேர்வதற்கும் தொடர்ந்து பயிலுவதற்கும் ஒரு பாலமாகவும் செயல்படுகிறது.

அறிவர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் கொலம்பிய பல்கலைக் கழகத்திற்கு முனைவர் பட்டம் பயிலச் சென்ற (15.06.1913) ஆண்டின் 100-வது ஆண்டான 2013-ல் "அகம்" தனது பணியை துவக்கியது. 2013ம் ஆண்டிலிருந்து பொறியியல் சேரும் பட்டியல் இன மாணவ - மாணவிகளின் எண்ணிக்கை பல மடங்காக உயர்ந்துள்ளது. இந்த அரும் பணியை "அகம்" தொடர்ந்து செய்து வருகிறது.

# மிஸ்டு கால் கொடுங்க.... 9487835905

இந்து ஆதிதிராவிடர் (SC) இந்து அருந்ததியர் (SCA) மதம் மாறிய ஆதிதிராவிட / அருந்ததிய கிறித்துவர் (SCC) / இந்து பழங்குடியினர் (ST) சமூகத்தைச் சார்ந்த மாணவ / மாணவிகள் கட்டணம் இல்லாமல் (அ) மிக மிக மிக குறைந்த கட்டணத்தில் / சலுகை கட்டணத்தில் (MBC / BC) கல்வி / விடுதி / மெஸ் வசதியுடன் தமிழகத்தின் 100-க்கும் மேற்பட்ட தரமான கல்லூரிகளில் பாலிடெக்னிக் / பொறியியல் (BE) போன்ற உயர் கல்வி பயின்றிட 10-ஆம் வகுப்பு / 12-ஆம் வகுப்பு இந்த ஆண்டு / கடந்த ஆண்டு தேர்ச்சி பெற்றவர்கள் போன்ற உயர்கல்வி சேர விரும்பும் பட்டியலின மாணவ, மாணவியரும் பட்டியலின மாணவ, மாணவியரை சேர்க்க விரும்பும் சமூக ஆர்வலர்களும், பெற்றோர்களும் அகம் அமைப்பாளர்களை தொடர்பாளர்களை அணுகவும்

**என்றும் கல்விப் பணியில்**



நிறுவனர்

**இரா.கிறிஸ்துதாஸ் காந்தி** IAS

கூடுதல் தலைமை செயலாளர் (ஓய்வு) தமிழ்நாடு அரசு.

9444045215 rcg1952@gmail.com

மாநில அமைப்பாளர்

**செல்ல செல்வகுமார்**

8675395577, 8675659115

akam.selvakumar@gmail.com

மாவட்ட தொடர்பாளர்

**நதியம் ரமணாத்திரி (எ) அ.மு.பறையரசன்**

227, சமுத்திரம் காலனி, திருவண்ணாமலை - 606 601.

amptvmalai@gmail.com / amramaranaathiri@gmail.com

**94878 35905 / 99524 28561**

ஒவ்வொரு சொட்டு நீரையும் சேமியுங்கள். ஒழுகும் குழாயை மூடுங்கள்' இது நாம் அடிக்கடி கேட்கும், காணும் ஒரு வாசகம். ஒரு நொடிக்கு ஒரு சொட்டு நீர் ஒழுகினால் நாளொன்றுக்கு 30 லிட்டர் நீர் செலவாகும் என்பது என்னவோ உண்மைதான். நல்லது, நாம் அனைவரும் குழாயை மூடிவிடுவோம். அதனால் மட்டும் நாடெங்கும் நீர் சேமிக்கப்பட்டு, தண்ணீர்த் தட்டுப்பாடு தீர்ந்துவிடுமா?

நிதர்சனத்தில் அப்படி நடக்கப்போவதில்லை. நீர் சேமிப்பில் மக்களுக்கும் பங்குண்டு என்பதை மறுக்கவில்லை. ஆனால், அப்பங்கு மக்களுக்கு மட்டுமே உரியதல்ல. மக்களைவிட அரசுக்கே அதில் பெரும் பங்கு உண்டு. ஏனென்றால், அதுதான் நிறைவேற்றும் இடத்தில் இருக்கிறது. ஆனால், இத்தகைய பரப்புரைகள் நீர் சேமிப்புக்கான பொறுப்பையும், நீர்ப் பற்றாக்குறைக்கான காரணங்களையும் முழுக்கவும் மக்கள் தலையில் மட்டுமே சுமத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. இதனால் அரசு இயந்திரத்தின் இயலாமை, நீர் மேலாண்மையில் அதன் தோல்வி போன்ற காரணிகள் வெகு திறமையாகப் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன.

தமிழகத்தில் நிலவும் நீர்ப் பற்றாக்குறை இயற்கையானதல்ல. இது செயற்கையாக உருவாக்கப்பட்ட ஒன்றே. உலகம் தோன்றியபோது எவ்வளவு நீர் இருந்ததோ அதேயளவு நீர்தான் இன்றும் இருக்கிறது. அதில் ஒரு சொட்டுகூட அதிகரிக்கவும் இல்லை, குறையவும் இல்லை. அப்படியெனில் இருந்த நீரெல்லாம் எங்கே போனது? இதற்கான விடையை நன்னீரின் இயல்பு சொல்லிவிடும். நன்னீரை வண்ணங்களின் அடிப்படையில் மூன்றாகப் பிரிக்கிறார்கள் 1) பச்சை நீர், 2) நீல நீர், 3) சாம்பல் நீர்

பச்சை நீர் என்பது வளி மண்டலத்து நீர். நீல நீர் என்பது புவியின் மேற்பரப்பில் உள்ள நீர்நிலைகள். இவை இரண்டுமே புவி தோன்றிய காலத்திலிருந்தே நீர் சுழற்சியால் நிலைபெற்று இருந்துவருபவை. இவற்றோடு மனிதர் உருவாக்கிய சாம்பல் நீர் சேர்ந்த பிறகே நீர்ச் சிக்கல் தோன்றியது. சாம்பல் நீர் என்பது கழிவு நீர். தொழிற்புரட்சிக்கும் நகரமயமாக்கலுக்கும் பிறகு பேரளவில் பெருகத் தொடங்கிய சாம்பல் நீர், நீர்நிலைகளோடு நிலத்தடி நீரையும் சேர்த்துப் பாழாக்க, நன்னீரின் அளவு குறைந்தது. உலகளவில் சாம்பல் நீரின் அளவு 2025-ல் 18,000 கன கிலோமீட்டராக அதிகரிக்கும் எனும் தகவல் பேராபத்து நம்மைத் தாக்கப் போவதற்கான அறிகுறி என்பதில் சந்தேகமில்லை.

எடுத்துக்காட்டாக, ஒரு லிட்டர் 'பிரேக் ஆயில்' ஒரு குளத்தில் தவறிக் கொட்டிவிட்டால், அது ஒரு லட்சத்து 58 ஆயிரம் லிட்டர் நன்னீரைப் பாழாக்கிவிடும். அப்படியெனில் தமிழகம் முழுக்க வேதிப்பொருட்களைக் கையாளும் தொழிற்சாலைகளால் மொத்தம் எத்தனை கோடி கன லிட்டர் நீர் பாழாகியிருக்கும்? தமிழகத்துக்கான பதிலைச் சொல்ல நொய்யலும் பாலாறுமே போதும்.

சரி, இருப்பதைக் காப்பாற்ற என்ன செய்ய வேண்டும்? முதலில் புவியியல் பாடத்தைத் திரும்பவும் கற்க வேண்டும். மழை மறைவுப் பகுதியான தமிழகத்தின் மொத்தப் பரப்பில் 27% மட்டுமே நீர் ஊறும் இயல்பு (Water Transmission) கொண்டது.

# தலை விரித்தாடும் தண்ணீர் பஞ்சம்

# ஒரு குடம் பத்து ரூபா!



மீதமுள்ள 73% பகுதியில் பலவிதப் பாறைகள் இருப்பதால், அந்த இயல்பு குறைவு. இந்த இருபத்தேழு விழுக்காடும் ஆற்றுப்படுகைகளில் மட்டுமே அமைந்துள்ளது. தமிழகத்தில் 33 ஆறுகள் இருந்தாலும், 17 ஆற்றுப்படுகைகள் மட்டுமே நீர் ஊறும் இயல்பு கொண்டவை என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

நீர் ஊறும் இயல்புக்கு அடிப்படையாக இருப்பது மணலே. மணல் என்பது நிலத்தடி நீர்த் தொட்டியின் மறுவடிவம். இது அரசுக்குத் தெரியாது என்பதைக் குழந்தைகள்கூட நம்ப மாட்டார்கள். ஒவ்வொரு லோடு மணலிலும் ஒழுகும் நீரின் அளவு ஆயிரம் லிட்டர் எனில் ஒட்டுமொத்த ஆற்று மணலும் எவ்வளவு கோடி லிட்டர் நீரைச் சேமித்துத் தந்திருக்கும்? ஏன் இவர்கள் நம்மை மட்டும் குழாயை மூடச் சொல்கிறார்கள் என்பதன் மர்மம் புரிகிறதா?

யார் தண்ணீர் விற்பனை நிறுவனங்கள் வாழ்வது?

இரு பருவ மழைகளிலும் வடகிழக்குப் பருவ மழையே நம் உயிர் ஊற்று. ஆனால், இது வெறும் 23 மழை நாட்கள் மட்டுமே. இதைக் கணக்கிட்டே நம் முன்னோர்கள் மழை நீரைச் சேமிக்க ஏரி, குளங்களை உருவாக்கி வைத்திருந்தார்கள். அதிலும் சங்கிலித் தொடர் ஏரிகள், உலகம் வியந்த ஒரு தொழில்நுட்பம். இத் தொழில்நுட்பத்தின் மேல்தான் குப்பைகள் கொட்டப்பட்டன. கட்டிடங்கள் கட்டப் பட்டன.

தமிழகத்திலுள்ள மொத்த ஏரிகளின் கொள்ளளவு 6,000 மில்லியன் கன மீட்டர். இவற்றுக்கு உயிரூட்டினாலே நமது நீர்ச் சிக்கல் தீரும். அப்படித் தீர்ந்துவிட்டால், பிறகு எப்படித் தனியார் தண்ணீர் விற்பனை நிறுவனங்கள் வாழ்வது?




இரு பருவ மழைகளிலும் வடகிழக்குப் பருவமழையே நம் உயிர் ஊற்று. ஆனால், இது வெறும் 23 மழை நாட்கள் மட்டுமே. இதைக் கணக்கிட்டே நம் முன்னோர்கள் மழைநீரைச் சேமிக்க ஏரி, குளங்களை உருவாக்கி வைத்திருந்தார்கள். அதிலும் சங்கிலித் தொடர் ஏரிகள், உலகம் வியந்த ஒரு தொழில்நுட்பம். இத் தொழில்நுட்பத்தின்மேல்தான்குப்பைகள்கொட்டப்பட்டன. கட்டிடங்கள் கட்டப்பட்டன.

தமிழகத்திலுள்ள மொத்த ஏரிகளின் கொள்ளளவு 6,000 மில்லியன் கன மீட்டர். இவற்றுக்கு உயிரூட்டினாலே நமது நீர்ச் சிக்கல் தீரும். அப்படித் தீர்ந்துவிட்டால், பிறகு எப்படித் தனி

வெகு அண்மையில்தான் மாநில நீர்வள மேலாண்மை முகமையின் மேனாள் இயக்குநர் ஒருவர், ‘மறைநீர் ஏற்றுமதியைக் குறைத்தால் நீர்ப் பற்றாக்குறைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்’ என்று வாய் திறந்திருக்கிறார். அதுவும் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு. இப்போது பதவியில் இருப்பவர்கள் என்ன செய்கிறார்கள் எனத் தெரியவில்லை.

அதிகாரிகளே இப்படி என்றால், அரசு இயந்திரமோ இன்னமும் உறங்கிக்கொண்டே இருக்கிறது. இப்படியே உறங்கினால்முகத்தில்தெளித்து எழுப்புவதற்குக்கூட நாளை குழாயில் நீர் சொட்டப் போவதில்லை என்பதுதான் நிதர்சனம்.

– சமயசெல்வம்





# மாவட்ட நிர்வாகம் கைவிட்ட நிலையில் உருவானது இளைஞர்களின் நீர்த்துளிகள் இயக்கம்

நீரின்றி அமையாது உலகு என்று வான்சிறப்பு அதிகாரத்தில் வள்ளுவன் சொன்னது மட்டும்தான் சிறப்பு.

திருவண்ணாமலையில் (மணலூர்பேட்டை சாலை) மாரியம்மன் கோயில் தெருவில் உள்ள நீர்த்துளிகள் இயக்கம் குளங்களை தூர்வாரி செப்பனிட்டு நீரின்றி அமையாது உலகு என்பதால் நீர் ஆதாரத்தை பாதுகாத்து வருகின்றனர்.

திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட மணலூர் பேட்டை சாலையில் மாரியம்மன் கோயில் தெருவில் பூமாந்தாகுளம் உள்ளது. பழமையான இந்த குளத்தில் எந்த நாளிலும் தண்ணீர் வற்றாது. இருப்பினும் நீர் இருந்தும் இல்லாத நிலை தான் காரணம் அதன் அசுத்த நிலை.

ஒரு காலத்தில் சுவையான குடிநீரைத் தந்த பூமாந்தாகுளம் இன்று அருகில் கூட செல்ல முடியாத அசுத்த குளமாக மாறி விட்டது. காரணம் என்னவாக இருக்கும்? எல்லாம் மக்களின் அலட்சியப் போக்கத்தான். இந்த அலட்சியப் போக்கை மாற்றுவதற்காகவும், இந்த பூமாந்தா குளத்தை செப்பனிடுவதற்காகவும், இங்கு வாழும் பொதுமக்களுக்கு உயிர் நீரை கொடுப்பதற்காக தோன்றியது "நீர்த் துளிகள் இயக்கம்"

இளைஞர்களின் எழுச்சியால் உருவானது இந்த நீர்த் துளிகள் இயக்கத்தின் நோக்கங்கள் என்ன என்பதை அதன் பொருப்பாளர்களை சந்தித்து கேட்டோம்.

முதலில் இந்த "நீர்த்துளிகள் இயக்கம்" உருவாக காரணமாக இருந்த ஒருங்கிணைப்பாளர் மு. பூவராகவன் அவர்கள் சந்தித்து உங்கள் இயக்கத்தின் முக்கிய நோக்கம் என்ன வென்று கேட்டதற்கு,


பூவராகவன்

திருவண்ணாமலையில் உள்ள அனைத்து குளங்களையும் தூர் வாரி சுத்தம் செய்வது தான் எங்கள் நோக்கம்.

முதலில் நாங்கள் குடியிருக்கும் மாரியம்மன் கோயில் தெருவில் உள்ள பிரசித்திப் பெற்ற பூமாந்தா குளத்தினை சுத்தம் செய்ய முடிவு செய்தோம் என கூறினார்.

இந்த இயக்கத்தில் உள்ள உறுப்பினர் களைப் பற்றி கேட்டதற்கு, முதலில் வெறும் 40 பேர் கொண்ட அமைப்பாக உருவான இந்த அமைப்பில் தற்போது 150 நபர்கள் கொண்ட இளைஞர்கள் அமைப்பாக உருவாகியுள்ளது என கூறினார்.

ஆரம்பத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே சுத்தம் செய்யும் பணி நடந்ததாகவும் அதனை அடுத்து பெரும்பாலான நேரத்தை இக்குளத்தை சுத்தம் செய்யவே செலவிட்டதாக வும் தெரிவித்தார்.

பெரிய குளம் என்பதால் குளத்தை சுத்தம் செய்ய அதில் உள்ள கழிவுப் பொருட்களை அகற்ற, படகுகளும், வலைகளும் பயன்படுத்திய தாக கூறினார்.



இதுவரையில் திருவண்ணாமலையில் எத்தனை குளங்களை சுத்தம் செய்துள்ளீர்கள் என கேட்டதற்கு, பூமாந்தா குளத்தை முழுவதுமாக சுத்தம் செய்துவிட்டோம். அதைத் தொடர்ந்து சோமாவாரக் குளம், (சரஸ்வதி குளம்), வேங்கிக்கால், மொண்டிக்குளம், இத்தனை குளங்களையும் சுத்தம் செய்வதற்கான பணியைத் துவக்கி சுத்தம் செய்து வருகிறோம்.

உலக சுற்றுச்சூழல் தினத்தன்று உங்களின் பங்களிப்பு என்ன என்று கேட்டோம்... உலக சுற்றுச்சூழல் தினத்தன்று, ''மிதிவண்டி, இரு சக்கர வாகனபிரம்மாண்ட பேரணியை நடத்தினோம்''.

இதன்மூலம் குளத்தை சுத்தம் செய்தல், நீர் ஆதாரத்தை பாதுகாத்தல், மரம் வளர்த்தல் ஆகியவற்றிற்கான விழிப்புணர்வை மக்களி டையே ஏற்படுத்தினோம்.



நீலகண்டன்

இந்த பேரணியை, திருவண்ணாமலை வெற்றி தமிழர் பேரவை அமைப் பின் தலைவர் கார்த்தி வேல்மாறன் துவக்கி வைத்து எங்களுக்கெல் லாம் சான்றிதழ் வழங்கி எங்களை வாழ்த்தி ஊக்கப்படுத்தினார் என பெருமை பொங்க மகிழ்வுடன் கூறி முடித்தார் ஒருங்கிணைப்பாளர் பூவராகவன்.

மற்றும் ஒரு ஒருங்கிணைப்பாளரான நீலகண்டன் என்பவரை சந்தித்து கேட்டதற்கு, எங்களுக்கு இளைஞர்களும் கல்லூரி மாணவர் களும் நல்ல ஒத்துழைப்பு கொடுக்கிறார்கள்.

மாவட்ட நிர்வாகம் ஒத்து ழைக்கிறதா உதவி செய்கிறதா என்று கேட்டோம்? இதுவரை மாவட்ட நிர்வாகம் எந்த உதவியும் செய்ய வில்லை. ஒரு குளத்தைப் பற்றிய முழு தகவல் களை கொடுங்கள் என்று கேட் டாலும் சரியாக கொடுப்ப தில்லை.

குளத்தில் கழிவுநீரை கலக்கும் பொதுமக்களை பார்த்து என் இப்படி அசுத்தம் செய்கின்றீர்கள் என்று கேட் டீர்களா என கேட்டதற்கு...

நாங்கள் என்ன செய்வோம் எங்களுக்கு பக்க கால்வாய் வசதியை அரசாங்கம் செய்து கொடுத்தால் நாங்கள் ஏன் கழிவு நீரை குளத்தில் விடுகிறோம் என்று பொதுமக்கள் கேட்கிறார் கள். அவர்கள் சொல்வதும் நியாயம் தானே!

அரசாங்கம் அவர்களிடம் வரியை வசூல் செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு எந்த வசதியும் செய்து தரவில்லை. அவர்கள் என்ன செய்வார்கள்? அருகில் உள்ள கழிவு நீரை கலந்து குளத்தை அசுத்தம்தான் செய்வார்கள்.

இதையும் மீறி எங்கள் ''நீர்த்துளிகள் இயக்கம் முடிந்த அளவிற்கு குளங்களை சுத்தம் செய்து வருகிறது என கூறினார் நீலகண்டன்.

அந்த பகுதியில் வாழ்ந்து வருகின்ற நடராஜன் என்பவரிடம் பூமாந்தா குளத்தைப் பற்றியும் நீர்த்துளிகள் இயக்கம் பற்றியும் கேட்டோம்...



நடராஜன்

இது பிரசித்தப் பெற்ற குளம் ஒரு காலத்தில் இந்த பகுதியில் உள்ள அனைத்து மக்களுக்கும் குடிநீர் தந்த குளம். நாளடைவில் பரா மரிப்பு இன்றி கிட்டக்கூட போக முடியாத துர்நாற்றம் வீசக்கூடிய குளமாக மாறிவிட்டது.

ஊர் கூடி தேர் இழுத்தால் தேர் ஓடும் என்பார்கள். ஒரே மண்ணில் தான் வேம்பும், கரும்பும் இருக்கிறது. வேம்பு கசக்கிறது. கரும்பு இனிக்கிறது என்றார். அதற்கு விளக்கமும் அளித்தார்.

இந்த பகுதியைச் சார்ந்தவர்கள் வேம்பாக குளத்தை அசுத்தம் செய்தார்கள். இதே பகுதியைச் சார்ந்த நீர்த்துளி இயக்கத்தின் உறுப்பினர்கள் சேர்ந்து குளத்தை சுத்தம் செய்து கரும்பாக மக்களின் மனதில் இனிக்கின்றனர் என்றார் நடராஜன்.

நீர்த்துளி இயக்கத்தின் பணியை பார்த்து பல இயக்கங்கள் நற்பணியை துவங்கி உள்ளார்கள்.

பராட்டுக்குரியவர்கள் நீர்த்துளிகள் இயக்க இளைஞர்கள், இவர்களின் வேண்டுதல்படி மாவட்ட நிர்வாகம் நகராட்சி சேர்ந்து குளங்களில் அசுத்த நீர் கலக்காமல் ஆங்காங்கே பக்க கால்வாய் அமைத்து கழிவு நீர்களை குளங்களில் செய்து விட்டால் குளங்கள் சுத்தமாகும் திருவண்ணாமலையில் நீர் பற்றாக்குறை வராது!

திருவண்ணாமலை மாவட்டம், நல்லவன் பாளையத்தைச் சேர்ந்த சமூக சேவகர், கவிஞர் ஆ.தே.முருகையனிடன் நீர்த்துளிகள் இயக்கத்தைப் பற்றியும், அவர்கள் சேவைகளைப் பற்றியும் கேட்டபோது

இந்த இளைஞர்களைப்போல ஒவ்வொரு மாவட்டத்திலும் நீர்த்துளிகள் அமைப்பு தோன்றினால் நாம் குடிநீருக்காக கங்கை, காவிரி, கிருஷ்ணாவிடம் கை ஏந்தத் தேவையில்லை என்று கூறிவிட்டு நீர்த்துளிகள் இயக்கத்திற்கு வாழ்த்துகளை தெரிவித்தார்.



அவருடன் சேர்ந்து நீர்த்துளிகள் இயக்கத்திற்கு மக்கள் விசாரணை வாழ்த்துகள் சொல்லி வரவேற்கிறது.

**- நா.நித்யா**



# பூட்டியே கிடக்கும் ஒகேனக்கல் சினிபால்ஸ்

மழை பெய்தால் மட்டுமே தண்ணீர் என்ற அவல நிலை ஏற்பட்டுள்ளது. தினிபால்ஸிலும் தண்ணீர் இல்லை என்ற நிலை. தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், ஒகேனக்கல்லில் மழை பெய்தால் மட்டுமே தண்ணீர் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கர்நாடகத்திலிருந்து ஒரு சொட்டு தண்ணீர் கூட இப்பொழுது வரை தமிழகத்திற்கு கிடைக்கவில்லை. இந்நிலையில் மேகதாது அணையினை கட்டுகிறார்கள். தண்ணீர் அனைத்தும் தடுத்துள்ளனர். இந்நிலையில் இரண்டு பகுதிகளிலிருந்து மட்டும் தண்ணீர் வருகின்றது என்ற நிலையில் மகிழ்ச்சியை தருகிறது.

1. அஞ்செட்டி பள்ளத்திலிருந்து
2. உந்துமந்தூர் பள்ளத்திலிருந்து

ஒகேனக்கலுக்கு சில நாட்களில் மழைநீர் காவிரி பகுதியில் நீர் ஆறாக ஓடுகிறது. இந்த மாதம் அதும் கோடை வெயில் தொடங்கிய முதல் வாரத்தில் சுத்தமாக தண்ணீர் இல்லை. வறண்ட நிலை மற்றும் சினி பால்ஸ் களிலும் குட்டைபோல் ஆங்காங்கே காட்சி யளிக்கிறது. சினிபால்ஸைஏழை, எளிய மக்கள் மற்றும் நடுத்தர குடும்பத்தினர் கண்ணல் மட்டுமே பார்க்க முடியும். குளிக்க முடியாது என்ற நிலை பல நாட்களாக நீடித்து வருகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் வேதனை அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டம், ஒகேனக்கலுக்கு தினந்தோறும் தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா மற்றும் கேரளா போன்ற பல்வேறு மாநிலத்தில் இருந்து ஏராளமான மக்கள் சுற்றுலா வருகின்றனர். அதுவும் விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமைகளில் ஆயிரக் கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல் கின்றனர். தற்போது ஒகேனக்கலுக்கு வரும் சுற்றுலா பயணிகளை மெயின் அருவியில் குளிக்க அனுமதி இல்லை.

இப்பொழுது சினி பால்ஸானது வனத் துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இதில் இரண்டு மாதங்களுக்கு முன்பு பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு சிறப்பான பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.





இதனால் சாதாரணம மக்கள் சினி பால்ஸை தூரத்தில் இருந்து மட்டுமே பார்க்க முடியும். குளிக்க முடியாது என்ற நிலை நீடித்து வருகிறது.

**இதுகுறித்து சுற்றுலா பயணிகள் மற்றும் தொழிலாளிகள் கூறுகையில்...**

ஒகேனக்கலுக்கு வெளி மாநில சுற்றுலா பயணிகள் மட்டும் அல்லாது தர்மபுரி சுற்றுப்புற மாவட்டத்தில் இருந்தும் அதிகள வில் மக்கள் வருகின்றனர்.

ஆனால் அருவிக்கு செல்லும் தொங்கு பாலத்தின் நடைமேடை மூடப்பட்டுள்ளது. இதனால் சினிபால்ஸில் குளிக்க வேண்டு மானால் பரிசல் மூலமாகவே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பரிசல் கட்டணமாக நான்கு நபர்களுக்கு ரூ. 750 செலுத்தி வருகின்றனர்.

பரிசலில் சென்றால் மட்டுமே சினி பால்ஸில் குளிக்க முடியும். இதனால் பணம் இல்லாமல் ஒகேனக்கலுக்கு வரும் கூலி தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் அனை த்து பொதுமக்களும் சினிபால்ஸின் பக்கம் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவர்கள் நடந்து சென்று அருவியில் குளிக்க வசதியாக உள்ள தமிழ்நாடு சுற்றுலா துறைக்கு சொந்தமாக தொங்குபாலம் அடைக்கப்பட்டுள்ளது. கடந்த 2 ஆண்டு களுக்கு முன்பு சினி பால்ஸூக்கு செல்ல முடியாத அளவுக்கு தொங்கு பாலத்தின் மறு நுழைவு வாயில் சீல் வைத்து பூட்டு போட்டு வைத்துள்ளனர்.

தற்பொழுது வரை தொங்கு பாலத்தின் மிக நடந்து சென்று நின்று பார்ப்பதற்கு மட்டும் சுற்றுலா துறையின் மூலம் ரூ. 5 கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. ஆனால் அதன ருகே சென்று பார்ப்பதற்கு அனுமதி இல்லை.

விவசாயிகள் கூலி தொழிலாளிகள் மற்றும் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் ஒரு பட்ஜெட் போட்டு குடும்பத்தோடு வருகின்றனர். கோடை வெயில் கொளுத்தும் நேரத்தில் பனி மேகங்கள் போன்று சில்லென்று கொட்டும் சினிபால்ஸில் குளிக்க வேண்டும் என்ற ஆர்வம் மற்றும் ஆசை அனைவருக்கும் வரும்.

ஆனால் படகு சவாரிகளை கட்டணம் இல்லாமல் ஏமாற்றத்துடன் திரும்புகிறோம். பரிசல் ஓட்டிகளுக்கு வருமானம் ஈட்டித்தர வேண்டும் என்ற நோக்கம் நல்லதுதான். அதே நேரத்தில் பல வருடங்களாக எந்த தடையும் இல்லாமல் சினிபால்ஸிற்கு சென்று கொண்டிருந்த நிலையில் தற்போது தொங்கு பாலத்தின் ஒரு வழியை பூட்டி வைத்திருப்பது பொதுமக்களுக்கு வருத்த மளிக்கிறது.

இதனால் வசதியானவர்கள், உயரதி காரிகளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே சினிபால்ஸிற்கு சென்று குளிக்க முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது என்ற நிலை மாறி சுற்றுலாப் பயணிகள் நேரடியாக சினி பால்ஸ் செல்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்பதே பொதுமக்களின் கோரிக் கையாக உள்ளது.

**– சிலம்பரசு**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. A. Mouriyan,

# EPSON
## CLOTHING INDIA®

ஆண்கள், பெண்கள் மற்றும்
குழந்தைகளுக்கு தேவையான
உலகத்தரம் வாய்ந்த முன்னணி
பிராண்டட் ரெடிமேட் வகைகள்
எங்களிடம் கிடைக்கும்.



எங்களின் நிறுவனத்திற்கு மாவட்ட வாரியாக
விநியோகஸ்தர்கள் தேவை

தொடர்புக்கு : **98840 30705 / 87545 50497**

# 1/364, Indira Gandhi 2nd Street, Karapakkam - 600 097.
Email : epsonclothingindia@gmail.com
visit in : epsonclothingindia@facebook / epsonclothingindia@youtube / epsonclothingindia@twitter

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

# மக்கள் விசாரணை

## WEB TV

## www.makkalvisaranai.com

இணையதள தொலைக்காட்சி
உதயம்

